விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 207 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 29 வெள்ளிக்கிழமை (14.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## சட்டத்தால் மட்டும் சமூகத்தை சரியான பாதைக்கு கொண்டு செல்ல முடியாது

### நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ



(கொழும்பு)

சட்டத்தால் மட்டும் சமூகத்தை சரியான பாதைக்கு கொண்டு செல்ல முடியாது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை உயர் நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளில் 33% சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் கற்பழிப்பு தொடர்பான வழக்குகள் உள்ளன. 15

## இந்தியாவுக்கு யாழில் நன்றி தெரிவித்த

### அமைச்சர் பந்துல



15

# எடுத்ததற்கெல்லாம் சர்வதேச விசாரணையா?

## கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன



(கொழும்பு)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரத்தில் சர்வதேச கண்காணிப்பை கோருவது சிறுபிள்ளைத்தனம். எடுத்ததற்கெல்லாம் சர்வதேச விசாரணையை கோராதீர்கள் என தமிழ் அரசியல்வாதிகளிடம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணவரத்தன தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

சபாநாயகர் தலைமையில்

## அரசமைப்பு பேரவை இன்று கூடுகின்றது

(கொழும்பு)

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையிலான அரசமைப்பு பேரவையின் விசேட கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு பாராளுமன்றக் கட் 15

‘மலையகம் - 200’

## பெருவிழா

அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

மலையகத் தமிழர்களைக் கௌரவிக்கும் வகையில் "மலையகம் - 200" எனும் பெருவிழாவை நடத்துவதற்கு அமைச்சரவை அனுமதிவழங்கியுள்ளது.

இலங்கை தொழி 15

## வடக்கு இ.போ.சபைக்கு 24 புதிய பேருந்துகள்



15

## பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நிதி ஒழுக்கம் அவசியமானது

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்ப நிதி ஒழுக்கம் இன்றியமையாதது. அரச செலவினங்களைக் கட்டுப்படுத்துவதுடன் அரசாங்க வருமானத்தை ஈட்டுவதற்கான முறையான புதிய வழிமுறைகள் உடனடியாக அறிமுகப்படுத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார். 15

## முல்லைத்தீவு மனித புதைகுழி தொடர்பில் விசேட கலந்துரையாடல்

### மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின் அகழ்வுப் பணி தொடர்பில் தீர்மானம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரம் பற்றிய விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்றது.

நேற்று காலை 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற கட்டடத்தொகுதியில் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி 16

புனரமைக்கப்பட்ட பாதையில்

## ஐந்து மாதங்களின் பின் யாழ்.வந்த வெள்ளோட்ட ரயில்



(யாழ்ப்பாணம்)

புனரமைக்கப்பட்ட ரயில் பாதையில் சுமார் ஐந்து மாதங்களின் பின் வெள்ளோட்ட ரயில் நேற்று யாழ். வந்தடைந் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைச்சி புளியம்பொக்கணை

**ஆலய வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்**

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று 14.07.2023 வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்துக்கு ஆலய தர்மகர்த்தாக்கள், அங்கத்தவர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-6910) ஆலய பரிபாலன சபை

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378, 076 097 3127

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணிற்கு 18.10.1944

விண்ணிற்கு 26.06.2022

கடந்த 26.06.2022 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எம் அன்புச் சகோதரி

### அமரர் விசாகரத்தினம் சின்னத்துரை

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வு நாளை 15.07.2023 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**"எம்மை பிரிந்த எம் இதய மலரை நாம் என்றும் மறவோம்"**

நெற்கொழு வீதி,
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

(C-6913)

குடும்பத்தினர்
076 469 8643

## கண்ணீர் அஞ்சலி



எமது சக நண்பன்

### அமரர் யேசைய்யா தேவரஞ்சன்


அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(16290)

ஆழ்ந்த அனுதாபத்துடன்
யாழ்ப்பாண மருத்துவ பிரதிநிதிகள் சங்கம்

மண்ணில் 1992.11.01
விண்ணில் 2023.07.13

## மரண அறிவித்தல்



### முத்து அழகையா

முறாவில் வீதி புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் மந்துவில் கிழக்கு கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்து அழகையா அவர்கள் 12.07.2023 அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து - வள்ளி தம்பதியரின் அன்பு மகனும் கனகு - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மருமகனும் ஞானம்மா அவர்களின் பாசமிகு கணவரும் தயா, கவிதா ஆகியோரின் அன்பு தந்தையும் சசிதரன் அவர்களின் பாசமிகு மாமனாரும் டனுசன் அவர்களின் அருமைத் தாத்தாவும் செல்வரத்தினம், இராசம்மா, சறோஜினி தேவி, பரிமளகாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 14.07.2023 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முறாவில் வீதி,
புலோலி தெற்கு,
பருத்தித்துறை.

(C-6909)

தகவல்:-
குடும்பத்தினர்
076 220 9324

## மரண அறிவித்தல்



தோற்றம் 05.09.1937

மறைவு 13.07.2023

### திருமதி அந்தோனிப்பிள்ளை செலினம்மா

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அந்தோனிப்பிள்ளை செலினம்மா அவர்கள் நேற்று (13.07.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தொம்மைப்பிள்ளை - மாத்தம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் (சின்னத்துரை) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கிளி, மலர், கீதபொன்கலம் மற்றும் இம்மானுவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சறோ, றஞ்சன் மற்றும் வவி, ஜெறோஷா, வவா, ற்வி ஆகியோரின் அன்புத் தாயும் ராஜரத்தினம், அழகுராணி, காலஞ்சென்ற அல்பி, யாழி, செல்வதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பவானி, ராஜன், ஜெயா, தர்ஷி, காலஞ்சென்ற பேபிசாளினி, நிக்ஷன், நிலோ, நிஷா, நித்தி, தனு, அலெக்ஸ், பிரியா, மெரீன், சரண், பெவன், கஜன், தீபா, பௌசி, டிமல், அனற் ஜெமினா, தயா, அன்ரன், சதீஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தர்மினி, டெனா, ஆன்ஷிபோனிக்கா, எவான்சலீன், எசான், ஜோயல், ஜாக்ஸ், நிகானா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.07.2023) வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணியளவில் ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு காக்கைதீவு சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்
077 658 2341

(C-0)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்கக் கோரி சென்னை மீனவர்கள் நல சங்கம் மனுத்தாக்கல்

(கொழும்பு)

**இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை மீட்கவும் 1974 ஆம் ஆண்டின் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை ரத்து செய்து கச்சதீவை மீட்கவும் மத்திய அரசிற்கு உத்தரவிடக்கோரி சென்னை மீனவர்கள் நல சங்கத்தால் உயர்நீதிமன்றின் கிளையில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.**

இந்த வழக்கு நேற்று முன் தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது 2014 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் எவரும் உயிரிழக்கவில்லை என உயர் நீதிமன்றத்தில் இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களுக்கு தேவையான சட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இராமேஸ்வரத்தின் ஒரு பகுதியாகவே கச்சதீவு காணப்பட்டதாகவும் 1974 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந் தத்தின் அடிப்படையில் கச்சதீவு இலங்கை வசம் ஒப்படைக்கப்பட்டதாக குறித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், தமிழக மீனவர்களுக்கு இலங்கை கடற்படையினர் தொடர்ந்தும் தொல்லை கொடுப்பதாகவும் 2013 ஆம் ஆண்டு வரை 111 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கொல்லப்பட்டுள்ளதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

எனவே, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை மீட்கவும் 1974 ஆம் ஆண்டின் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை இரத்து செய்து கச்சதீவை மீட்கவும் மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இந்திய மீனவர்களை பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் 2014 ஆம் ஆண்டின் பின்னர் தமிழக மீனவர்கள் எவரும் உயிரிழக்கவில்லை எனவும் இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாகவும் இந்த வழக்கு விசாரணைக்கு உகந்தது அல்ல எனவும் மத்திய அரசு மன்றில் தெரிவித்துள்ளதாக "தஹிந்து" செய்தி வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும், கடந்த வாரத்தில் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளதாக நீதிபதிகள் சுட்டிக்காட்டியதுடன், இது தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால் தற்போது எந்த உத்தரவையும் பிறப்பிக்க இயலாது எனவும் குறிப்பிட்டுள்ளனர். (நி-5)

## இடைத்தரகர்களிடம் பொருட்களை பெற்றால் குத்தகை உரிமம் ரத்தாகும்- விவசாய அமைச்சர்

(கொழும்பு)



விவசாயிகளின் உற்பத்திகளை கொள்வனவு செய்ய மறுக்கும் பொருளாதார மத்திய நிலையங்களுக்கான குத்தகை உரிமப் பத்திரத்தை இரத்து செய்வதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

பொருளாதார மத்திய நிலையங்களின் வர்த்தகர்கள், இடைத்தரகர்கர் வாயிலாக காய்கறிகள் மற்றும் பழங்களை கொள்வனவு செய்து அதிக இலாபத்திற்கு விற்பனை செய்கின்றனர்.

இதனால் விவசாயிகள் மற்றும் நுகர்வோர் பாதிக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள் ளார்.

இந்த நிலையில் தற்போது பொருளாதார மத்திய நிலையங்களில் இடைத்தரகர்களிடம் காய்கறி மற்றும் பழங்களை பெற்றுக் கொள்ளும் வர்த்தகர்களின் வர்த்தக நிலையத்து க்கான குத்தகை உரிமப் பத்திரங்களை இரத்துச் செய்து ஏனைய வர்த்தக முயற்சியாளர்களுக்கு வழங்க் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5)

## அஸ்வெசும திட்டத்திற்கு 206 பில்லியன் ரூபா ஒதுக்கீடு!

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில், இலங்கையில் வறுமையை ஒழிப்பதற்காக "அஸ்வெசும" நலன்புரித் திட்டத்திற்கு206 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்ய இருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த அவர், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பவற்றுடன் நடத்திய கலந்துரையாடல்களில் வறிய மக்களை அதிலிருந்து மீட்பதற்கு குறைந்தது 187 பில்லியன் ரூபாவை ஒதுக்குமாறு பரிந்துரை செய்ததாக குறிப்பிட்டார்.

எனினும், இலங்கை அரசாங்கம் அதனை 206 பில்லியன் ரூபா வரை அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்தார்.

"அஸ்வெசும" நலன்புரி வேலைத்திட்டத்தில் சுமார் 20 இலட்சம் குடும்ப அலகுகளுக்கு நன்மைகள் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது சமுர்த்திக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளும் குடும்ப அலகுகளில் 70 சதவீதமான குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். (நி-5)

## அனுமதிப்பத்திரமின்றி பயணித்த 4 பேருந்துகள் குறித்து நடவடிக்கை

### தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

(கொழும்பு)

அனுமதிப் பத்திரம் இன்றி பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளைக் கண்டறியும் நடவடிக்கையைத் தீவிரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதனையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் இருந்து மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்கு அனுமதிப்பத்திரம் இன்றி இயங்கிய நான்கு பேருந்துகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் நிலான் மிராண்டா தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதுதொடர்பான சோதனை நடவடிக்கைகளுக்காக 4 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர்நாயகம் தெரிவித்துள்ளார். (நி-5)

## பால்மாவுக்கான வரியை திருத்த தீர்மானம்

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கான சுங்க வரியை திருத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் 1 கிலோ பால்மாவிற்கு 100 ரூபாய் வரி அறவிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-5)

# ஹரி ஆனந்தசங்கரிக்கு விசா வழங்க மறுத்தது இலங்கை

## பழிவாங்கும் செயல் என சமூக ஊடகங்கள் கருத்து

(ஒட்டாவா)

கனடாவின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கான விசாவை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளது.

இதனை ஹரி ஆனந்த சங்கரி தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு ஏற்றதாக காணப்படும்போதே கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடுவதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது.

கொடும்பாவிகளை எரிப்பது இலங்கையின் அரசாங்கங்களின் நடவடிக்கைகளை சரிசெய்யும் கவலையளிக்கும் விதத்தில் இலங்கை எனக்கு விசா வழங்க மறுத்துவிட்டது. நாங்கள் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டத்திற்காக பழிவாங்கும் நடவடிக்கை. இது எங்களை மௌனமாக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில வாரங்களிற்கு முன்னர் சிங்கள ஆர்ப்பாட்டக்காரர்கள் வவுனியாவில் கனடா பிரதமர் மற்றும் ஹரி ஆனந்த சங்கரியின் கொடும்பாவிகளை எரித்தமை குறிப்பிடத்தக்கது.

கனடாவின் தமிழர் இனப்படுகொலை நினைவுதினத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதத்திலேயே இந்த கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.



இதேவேளை தமிழர்கள் உரிமைக்கான கனடாவின் ஆதரவிற்கு பதில் நடவடிக்கையாகவே ஹரி ஆனந்த சங்கரிக்கு விசா மறுக்கப்பட்டுள்ளது என சமூக ஊடகங்களில் கருத்துக்கள் வெளியாகியுள்ளன. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்நாடு பிரிமியர் லீக்

# மீண்டும் மகுடம் சூடியது லைக்கா கோவை கிங்ஸ்



தமிழ்நாடு பிரிமியர் லீக் இருபதுக்கு -20 கிரிக்கெட் தொடரின் 7 ஆவது பருவத்திற்கான இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று லைக்கா கோவை கிங்ஸ் அணி மீண்டும் மகுடம் சூடியுள்ளது.

திருநெல்வேலி ஐ.சி.எல். மைதானத்தில் நடந்த இறுதி போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற லைக்காவின் கோவை கிங்ஸ் அணி தலைவர் ஷாருக்கான் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

அதன்படி முதலில் களமிறங்கிய லைக்காவின்கோவை கிங்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 205 ஓட்டங்களை குவித்தது.

அவ்வணி சார்பாக சுரேஷ் குமார் 57 ஓட்டங்களையும் முகிலேஷ் 51 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொடுக்க, பந்து வீச்சில் நெல்லை அணி சார்பாக சோனு யாதவ், வாரியர் ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளை சாய்த்தனர்.

இதனை தொடர்ந்து 206 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நெல்லை றோயல் கிங்ஸ் அணி 15 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 101 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வியைத் தழுவியது.

நெல்லை றோயல் கிங்ஸ் அணி சார்பாக அணித் தலைவர் அருண் கார்த்திக் அதிகபட்சமாக 27 ஓட்டங்களை குவிக்க லைக்காவின் கோவை கிங்ஸ் அணி சார்பாக சுப்ரமண்யன் 4 விக்கெட்டுகளையும் ஷாருக் கான் 3 விக்கெட்டுகளையும் சாய்த்தனர்.

இதன் மூலம் இரண்டாவது ஆண்டாக லைக்கா கோவை கிங்ஸ் அணி தமிழ்நாடு பிரிமியர் லீக் இருபதுக்கு- 20 கிரிக்கெட் தொடரை கைப்பற்றியுள்ளது. (4)

## எனது மனநிலையும் உறுதியும் மாறப் போவதில்லை - மெஸ்சி

கால்பந்து உலகின் சிறந்த வீரரும் ஆர்ஜென்டீனா அணியின் கப்டனுமான லியோனல் மெஸ்சி பிரான்ஸை சேர்ந்த பாரீஸ் செயிண்ட் ஜேர்மன் அணிக்காக கடந்த 2 ஆண்டுகளாக விளையாடி வந்தார்.

பி.எஸ்.ஜி அணியுடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அந்த அணியில் இருந்து விலகி அமெரிக்காவின் இண்டர் மியாமி அணிக்காக விளையாட உள்ளார்.

இந்நிலையில் அமெரிக்காவில் இண்டர் மியாமி வீரராக அவரை அறிமுகப்படுத்த அணியின் நிர்வாகம் சிறப்பு நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்து உள்ளது. அதில் பங்கேற்பதற்காக மெஸ்சி அமெரிக்கா சென்று உள்ளார்.

அங்கு அவர் தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்கு பேட்டி அளித்தார். அதில் "நான் எடுத்த முடிவில் மகிழ்ச்சியடைகிறேன். புதிய சவாலை எதிர்கொள்ள தயாராகவும் ஆர்வமாகவும் இருக்கிறேன்." என்று கூறினார்.

மேலும் அவர், "எனது மனநிலையும் என் உறுதியும் மாறப் போவதில்லை. நான் எங்கிருந்தாலும் எனக்காகவும் அணிக்காகவும் அதிகபட்ச உழைப்பை கொடுக்க முயற்சிப்பேன். உயர்ந்த தரத்தில் தொடர்ந்து செயற்படுவேன்" என்று பேட்டி அளித்து உள்ளார். (4)



கீரிமலை சிவானந்தா விளையாட்டுக்கழகம் வலிகாமம் அணிகளிடையே நடத்தும் 7 பேர் கொண்ட தொடரின் நேற்றைய போட்டியில் கஜரதன் தலைமையிலா குப்பிழான் குறிஞ்சி குமரன் அணி, குப்பிழான் விக்னேஸ்வரா அணியை 1:1 என சமநிலைப்படுத்தி பெனால்டி உதையில் 5:4 என வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2876

### பகிரதி

கல்யாணமான புதுசுல என் மனைவி, தோசை சுடவா? இட்லி சுடவா?ன்னு கேப்பா..



இப்பல்லாம்..? தோசை சுட வா, இட்லி சுட வா'ன்னு கூப்பிறா..

### மயூரன்

கடவுளே எப்படியாவது நியூயோர்க்க இந்திய தலைநகரமா மாத்திரு.. ஏன் பாப்பா அப்படி வேண்டுறாய்?



ஏன்னா நான் அப்படித்தான் பரீட்சையில எழுதியிருக்கன்...

### அகிலா

வாட்ஸ்அப்


திங்கட்கிழமை காலைல ஒருத்தர் சுறுசுறுப்பா சிரிச்ச முகத்தோட வேலைக்கு வர்றாருன்னா...

அவரு ஓனராத்தான் இருக்கனும்.



### ஆதிஸ்ராம்


நேற்று இட்லியா இருந்தது... இரவு உப்புமாவா ஆகுது... அதுவும் மீந்து போச்சுனா காலைல போலப்பொடியா யூஸ் ஆகுது...



இதனால தான் உலக நாடுகள் நம்மள கண்டாலே நடுங்குது...

### டினோசா

அப்பப்பா... காலைல எழுந்திரிச்சா ஒரு மனுசனுக்கு எவ்வளவு வேலை. பல்லு விளக்கனும், காபி சாப்பிடனும் டிபன் சாப்பிடனும் மறுபடியும் தூங்கனும்...



எழுந்து மதியம் சாப்பிடனும் அப்புறம் தூங்கி எழுந்து உ சாப்பிடனும் அதுக்கு மேல ரெஸ்ட் எடுத்து நைட் சாப்பிடனும்... முடியல சாமி!!!

### யசோன்

அதிகாலை எழுவது...

| | | |
|---|---|---|
| 4.00 | மணி | ரொம்ப நல்லது |
| 5.00 | மணி | நல்லது |
| 6.00 | மணி | பரவாயில்லை |
| 7.00 | மணி | சோம்பேறி |
| 8.00 | மணி | கடும் சோம்பேறி |
| 9.00 | மணி | நோயாளி |
| 10.00 | மணி | வாழ்வதே வீண் |

அப்பாடா நாம லிஸ்ட்ல இல்லை நாம ஷார்ப்பா 10.30 இற்கே எழும்பிடுவோம்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# 735 மில்லியன் மக்கள் பட்டினியால் பாதிப்பு

## ஐ.நா அறிக்கை

(ஜெனிவா)

உலகளாவிய ரீதியில் 735 மில்லியன் மக்கள் பட்டினியால் அவதியுறுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் அண்மைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த எண்ணிக்கை கொவிட் தொற்று பரவலுக்கு முன்னர் பட்டினியால் அவதியுற்றவர்களின் எண்ணிக்கையை விட அதிகம் என ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை 2030 ஆம் ஆண்டுக்குள் பட்டினி இல்லாத உலகை உருவாக்கும் இலக்கை அடைவதற்கு இது கடுமையான அச்சுறுத்தலாக அமையும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

# தரமற்ற மருந்துகள் விநியோகிக்கப்படவில்லை

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

தரமற்ற மருந்துகளை நாட்டிற்குக் கொண்டு வருவதற்கு எப்போதுமே நடவடிக்கை எடுக்கவில்லை என சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் விசேட மருத்துவர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற சுகாதார துறையின் தற்போதைய நிலை தொடர்பாக ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சில மருந்துகள் நோயாளிகளுக்கு வழங்கப்படும் போது அவற்றில் சிக்கல்கள் ஏற்படுமாயின், அதற்காக சுகாதார சேவைகள் சபை விரைவாக சிகிச்சை வழங்குவதுடன் ஆய்வுகளை மேற்கொண்டு அந்த மருந்துப் பாவனையை தவிர்க்க பொருத்தமான முறையை சுகாதார அமைச்சு மேற்கொள்வதாகவும் தெளிவுபடுத்தினார்.

தற்போது நாட்டில் பயன்படுத்தப்படும் மருந்துகளில் 80% வரை இந்தியாவிலிருந்து கொண்டுவரப்படுவதாக குறிப்பிட்ட அவர், இந்தியாவில் இருந்து இலங்கைக்கு விநியோகிக்கப்படும் மருந்துகள் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பூரண அனுமதியுடன் விநியோகிக்கப்படுகிறது.

இவ்வாறு மருந்துகளைக் கொள்வனவு செய்வதானது இன்று, நேற்று அல்ல முன்னொரு காலத்திலிருந்தே நடைபெறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# அரச பாடசாலைகளின் தரம் 1 இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

2024 ஆம் வருடத்தில் அரச பாடசாலைகளில் தரம் ஒன்றிற்கு தமது பிள்ளைகளை அனுமதிப்பதற்கு எதிர்பார்க்கும் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தரப்பட்டுள்ள ஆலோசனைகளின் படி வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை உரிய சகல ஆவணங்களுடனும் தமக்குரிய பாடசாலை அதிபர்களுக்கு 2023 ஒகஸ்ட் 18 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சகல தகைமைகளும் 2023 ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் செல்லுபடியாகக்கூடிய வகையில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்று கல்வியமைச்சு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் நேற்று அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்விலை 305 ரூபா முதல் 307 ரூபா வரையில் காணப்படுகின்றது.

அத்துடன் அதன் விற்பனை பெறுமதியானது 320 ரூபா முதல் 322 ரூபாவாக பதிவாகியமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இலவச கருத்தரங்கு

(கிளிநொச்சி)

சருமப் பராமரிப்பு சம்பந்தமான இலவச கருத்தரங்கு ஒறிபிலேம் நிறுவனத்தினால் நாளை மறுதினம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி முரசுமோட்டையில் அமைந்துள்ள பொது நோக்கு மண்டபத்தில் காலை 9-12 மணிவரை நடைபெறவுள்ளது.

அத்துடன் சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் இலகுமுறை வழிகாட்டலும் வழங்கப்படும். பங்கு கொள்ளும் அனைவருக்கும் சர்வதேச அங்கீகாரமுடைய சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக தகவல்கள் மற்றும் பதிவுகளுக்கு 077 818 1099, 076 773 0510 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (4)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர்
திருமதி. சுதாஜினி சஞ்சீவ்
அவர்களின் பாசமிகு தாயார்.

அமரர். திருமதி.
**திருநாவுக்கரசு பூமணி**



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக்கழகம்,
யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி.

(சீ-6908) 14.07.2023


# இராசிபலன்

14.07.2023
ஆனி 29, வெள்ளிக்கிழமை
துவாதசி முன்னிரவு 9.22 மணிவரை


ரோகினி பின்னிரவு 12.49 மணிவரை
சுபநேரம் -6.00-7.30 மணிவரை
இராகுகாலம்-10.30-12.00 மணிவரை

சந்திராஷ்டமம்-
சித்திரை, சுவாதி

வளவன்


மேஷம்


வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.


கடகம்

பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், காரிய அனுகூலமுண்டு, தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், பொதுவாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும் வாய்ப்புண்டு.


துலாம்

மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.


மகரம்

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


ரிஷபம்

பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், எதிர்கால நலன் கருதி ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்வீர்கள்.


சிம்மம்


செய்தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


விருச்சிகம்


இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், உதிரி வருமானம் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.


கும்பம்


குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.


மிதுனம்

கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் வாய்ப்புண்டு.


கன்னி

தொழில் நலன் கருதி புதிய முயற்சிகள் எடுப்பீர்கள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


தனுசு

வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், நண்பர்கள் வழியில் நம்பிக்கைகள் நடைபெறலாம், போசன சுகமுண்டு.


மீனம்

பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வரலாம், காரிய அனுகூலமுண்டு, போசன நன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனுடைய மிகச் சிறந்த நண்பர்கள் அவனுடைய பத்து விரல்கள்.

# சடலங்கள் எரிக்கின்ற புகை வீடுகளுக்குள் வருகின்றது

## மயானத்தை இடம் மாற்றுமாறு கல்லுண்டாய் குடியேற்ற திட்ட மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை - கல்லுண்டாய் இந்து மயானத்தில் சடலங்கள் எரிக்கின்ற புகை வீடுகளுக்குள் வருகின்றது. அந்த புகையை நாங்கள் சுவாசிப்பதால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றோம் என கல்லுண்டாய் குடியேற்றத்திட்ட ம்க்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் எங்களுக்கு இந்த கல்லுண்டாய் பகுதியில் குடியேற்றத் திட்டம் அமைத்துக் கொடுத்து எங்களை இங்கே குடியமர்த்தி இருக்கின்றார்கள். ஆனால் எங்களுக்கான அடிப்படை வசதிகள் எவையும் பூர்த்தி செய்யப்படவில்லை.

எங்களது குடியேற்றத்திட்டத்தில் இருந்து சுமார் 30 மீற்றர்கள் தொலைவில் ஆனைக்கோட்டை - கல்லுண்டாய் மயானம் அமைந்துள்ளது. அந்த மயானத்தில் சடலங்கள் எரிக்கின்ற போது அந்தப் புகை எமது வீடுகளுக்குள் வருகின்றது.

இந்தப் புகையை சுவாசிப்பதால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் இதற்காக சுமார் ஒரு ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் கூறுகின்றார். ஆனால் தற்போது பிரதேச சபையின் செயலாளர் எஸ்.சபேசன் புதிய மயானம் அமைப்பதற்கு நிதி இல்லை என்று கூறுகின்றார்.

ஏற்கனவே வரவு -செலவு திட்டத்தில் மயானம் அமைப்பதற்கு என ஒதுக்கப்பட்ட நிதி எங்கே? மழைக் காலங்களில் மயானத்தில் இருந்து வெள்ளம் வீடுகளுக்குள் வருகிறது. இதனால் மயானத்தில் எரிக்கின்ற கழிவுகள் வெள்ளத்தோடு வீடுகளுக்குள் வருகின்றன. பருவக்காற்று காலங்களில் பிணம் எரித்த சாம்பல் வீடுகளுக்குள் வருகின்றது. இந்த அவல நிலைகள் அதிகாரிகளுக்கு தெரியுமா? இதனால் ஒரு உயிர் போனால் அந்த உயிரை அதிகாரிகளால் வழங்க முடியுமா?

எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உடனடியாக இதனை கவனத்தில் கொண்டு, சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் வழங்கிய காணியில் மயானத்தினை அமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றனர். (4-5-104)



மறைந்த, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 34 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று வலி. மேற்கு பிரதேச சபையின் முன்னால் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலையடியில் இடம்பெற்றது. இதன்போது அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து, சுடரேற்றி, மலர் அஞ்சலி தூவி நினைவு அஞ்சலி செலுத்தப்பட்டது.
(படம்- கஜிந்தன் ,சிவசாந்தன்)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெற்று வரும் நூற்றாண்டு சிறப்பு ஒன்று கூடல் நிகழ்வில் நேற்று கலாசாலையின் முன்னாள் பிரதி அதிபர் பண்டிதர் கலாநிதி செ. திருநாவுக்கரசு, கோப்பாய் ஆசிரிய கலாசாலை கடந்த நூற்றாண்டுகளில் சாதித்த விடயங்கள் எவை? என்ற பொருளில் பேருரை ஆற்றினார். உரையாற்றிய அவரை கலாசாலை அதிபர் ச. லலீசன், பிரதி அதிபர் க. செந்தில்குமாரன், கலாசாலை முகாமைத்துவ சபை உறுப்பினர் சு.சிவலோஜனி ஆகியோர் இணைந்து பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.
(படம்-சிவசாந்தன்)



சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிறுவனத்தில் மனித உரிமைகள் டிப்ளோமோ கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. (படம்- கஜிந்தன்.சுபேசன்)

# தமிழரசுக் கட்சியின் நிர்வாக செயலாளர் வீட்டில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ். குலநாயகம் வீட்டில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு திருட்டுச் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்துக்கு அருகில் உள்ள வீட்டிலேயே குறித்த திருட்டு சம்பவம் பதிவானது.

வீட்டில் இருந்தவர்கள் நித்திரையில் இருந்த சமயத்தில், வீடு புகுந்த திருடர்கள், இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் சிறிய தொகைப் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (4-5-33)



கோண்டாவில் இந்துக் கல்லூரியில் கடந்த ஜூன் 28 ஆம் திகதி கண்காட்சி நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் கல்விமாணி (ஆரம்பக்கல்வி) (B.Ed Primary) கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 15.08.2023 இற்கு முன்னர் இணையவழி ஊடாக (www.ou.ac.lk) விண்ணப்பத்தினைப் பெற்று விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4-5)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் மனிதவள முகாமைத்துவம் மற்றும் ஆங்கிலக் கற்கைநெறி ஆகிய குறுகிய காலக் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 31.07.2023 இற்கு முன்னர் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் விண்ணப்பத்தினைப் பெற்று விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4-5)

# திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் ஆட்கள் அற்ற வீடு ஒன்றினுள் புகுந்து வீட்டில் இருந்த பொருட்கள் திருடப் பட்டிருப்பதாக கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதன்போது வீட்டில் இருந்த துவிச்சக்கரவண்டி உள்ளிட்ட பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டிருப்பதாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-5-30)

# குருநகர் புனித கார்மேல் அன்னை ஆலய திருவிழா

(யாழ்ப்பாணம்)

குருநகர் புனித கார்மேல் அன்னை ஆலய வருடாந்த திருவிழா கடந்த 9 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

ஆயத்த வழிபாடுகள் தினமும் மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும். நற்கருணை விழா நாளை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். திருவிழா திருப்பலி நாளை மறுதினம் காலை அன்று 6 மணிக்கும் அன்னையின் திருச்சுருப பவனி மாலை 5.30 மணிக்கும் நடைபெறும். (4-5-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணெய் குழாய் அமைப்பு தொடர்பில் இலங்கை - இந்தியா பேச்சுவார்த்தை



(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு எண்ணெய் குழாய் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

இந்த நாட்டில் எரிபொருள் விநியோகத்தை விரைவுபடுத்துவதும் மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாமல் தடுப்பதும் இதன் முக்கிய நோக்கமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# வலம்புரி சங்குடன் 6 பேர் கைது

(கொழும்பு)

ஜா - எல பகுதியில் அதிக பெறுமதியுடைய வலம்புரி சங்குடன் இரு பெண்கள் உள்ளிட்ட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

14 அங்குலம் நீளமான வலம்புரி சங்கை 56 இலட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்ய தயாராகவிருந்த சந்தர்ப்பத்தில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் பயணித்த கெப் வாகனம் மற்றும் 02 மோட்டார் சைக்கிள்கள் என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. கிரிந்திவெல, நிட்டம்புவ, அங்கொடை, மாளிகாகந்தை பகுதிகளைச் சேர்ந்த 6 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை வெலிசறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-5)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
உயரம்: 5' 9
தகைமை/தொழில்: Supermarkert owner
எதிர்பார்ப்பு: பட்டதாரி.
தொ.இ: B/13821

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
உயரம்: 5' 5"
தகைமை/தொழில்: விவசாய பட்டதாரி Promotin office (Pvt)
எதிர்பார்ப்பு: பட்டதாரி / அரச உத்தியோகம்
தொ.இ: B/13822

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 40
உயரம்:5' 10"
தகைமை/தொழில்: QS ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி/ அரச உத்தியோகம்
தொ.இ: B/13823

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பூரம்
உயரம்:172 Cm
தகைமை/தொழில்: A/L சாரதி (கட்டார்)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/13824

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 16 1/2
உயரம்:5' 3"
தகைமை/தொழில்: BSc Software Engineer
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ:G/13838

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 22 1/2
உயரம்:154 cm
தகைமை/தொழில்:HND IT
எதிர்பார்ப்பு: உள்நாடு. வெளிநாடு
தொ.இ: G/13841

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 20
உயரம்:5' 2
தகைமை/தொழில்: BSc,IT தனியார் தொழில்
எதிர்பார்ப்பு:படித்த உத்தியோகமுள்ளவர், சைவபோசனம்
தொ.இ:G/13852

பிறப்பு: 2001 இந்து
நட்சத்திரம்: ரோகினி
உயரம்:162 cm
தகைமை/தொழில்: பல்கலைக்கழக மாணவி (Swiss)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ:G/13858

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



## அதிகாரப் பகிர்வுக்கான இயக்கம்
## බලය බෙදා හැරීම සඳහා වූ ව්‍යාපාරය
## Movement for Devolution of Power

No. 84, Anthoniyar Street, Uppuveli, Tricomalee.

13 ஆவது திருத்தச் சட்டத்தை
முழுமையாக நடைமுறைப்படுத்துவதும்- இந்தியாவின் வகிபாகமும்
பற்றிய கலந்துரையாடலுக்கான அழைப்பு

Invitation for a Discussion on the Full Implementation of the 13 th Amendment & India's Role.

யாழ்ப்பாண மத்திய கல்லூரி அருகிலுள்ள
தந்தை செல்வா கலையரங்கத்தில்
2023 ஜூலை 15, சனிக்கிழமை,
பிற்பகல் 3.00 மணிக்கு.

To be held at the
Thanthai Chelva Auditorium
Located near Central College, Jaffna
On Saturday 15th July 2023,
at 3.00pm

தலைமை:
பேராசிரியர் சி. பத்மநாதன்,
வேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
பங்கேற்பவர்கள்:

1. **திருமதி. கோசலை மதன்**
   தலைவர், சட்டபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
2. **திரு. சிவசிதம்பரம் கிருஷ்ணானந்தன்**
   முன்னாள் தேசிய மதியுரைஞர், அரசிறைப் பகிர்வுக்கான ஆற்றலை மேம்படுத்தல்
3. **திரு. கந்தப்பு பத்மநாதன்**
   முன்னாள் செயலாளர், கிழக்கு மாகாண சபை, முன்னாள் FAO மதியுரைஞர்
4. **திரு. இராசையா பேரின்பநாயகம்**
   முன்னாள் செயலாளர், பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் (அ. அமிர்தலிங்கம்)
5. **கலாநிதி காசிலிங்கம் விக்னேஸ்வரன் முன்னாள் பா. உ.**
   தலைவர், அகில இலங்கைத் தமிழர் மகாசபை.
   முன்னாள் செயலாளர், வடக்கு-கிழக்கு மாகாண சபை.
6. **தமிழர் விடுதலைக் கூட்டணி**
   தலைவர், வீரசிங்கம் ஆனந்தசங்கரி முன்னாள் பா. உ.
7. **தமிழ் மக்கள் கூட்டணி**
   தலைவர், நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் பா. உ.
8. **ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி**
   செயலாளர் நாயகம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பா. உ. சார்பாக
   திரு. சின்னதுரை தவராசா முன்னாள் பா. உ.
9. **தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்**
   தலைவர், அமைச்சர் சி. சந்திரகாந்தன் பா. உ.
10. **இலங்கைத் தமிழரசுக் கட்சி**
    தலைவர், மாவை சோ. சேனாதிராசா முன்னாள் பா. உ.
11. **ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**
    தலைவர், சுரேஷ் பிரேமசந்திரன் முன்னாள் பா. உ.
12. **தமிழீழ விடுதலை இயக்கம்**
    தலைவர், செல்வம் அடைக்கலநாதன் பா. உ.
13. **தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி**
    தலைவர், திருநாவுக்கரசு சிறீதரன் முன்னாள் மா. ச. உ.
14. **சமத்துவக் கட்சி**
    தலைவர் மு. சந்திரகுமார் முன்னாள் பா. உ.
15. **ஈழவர் ஜனநாயக முன்னணி**
    செயலாளர் நாயகம், இராஜநாதன் பிரபாகரன்
16. **ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி**
    பிரதிநிதி பா. கஜதீபன் முன்னாள் மா. ச. உ., தலைவர், த. சித்தார்த்தன் சார்பாக.
17. **அகில இலங்கை தமிழர் மகாசபை**
    பிரதிநிதி, அமைச்சர் வியாழேந்திரன் பா. உ.
18. **நன்றியுரை :**
    அதிகாரப் பகிர்வுக்கான இயக்கம், கலாநிதி கா. விக்னேஸ்வரன்.

அனுசரணை
SPONSORED BY

அதிகாரப் பகிர்வுக்கான இயக்கம்
බලය බෙදා හැරීම සඳහා වූ ව්‍යාපාරය
Movement for Devolution of Power

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை
Chelvanayakam Memorial Trust
ஆய்வு நிறுவனம், யாழ்ப்பாணம்.
Aaivu Association, Jaffna.

தொடர்புகளுக்கு:- சி.முருகதாஸ்
077 310 1462

https://youtube.com/live/FE6-kQmKC4A?feature=share



S.J.V.CHELVANAYAKAM.

(C-6907)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# வடஇந்தியாவில் கடும் மழை!

## வெள்ளம், நிலச்சரிவால் இமாச்சல பிரதேசம் மோசமாக பாதிப்பு!

- இதுவரை 88 பேர் உயிரிழப்பு
- 100 பேர் காயம்
- 79 வீடுகள் தரைமட்டம்
- இலட்சக்கணக்கான மக்கள் பாதிப்பு





(டில்லி)

**இமாச்சலப் பிரதேசத்தில் அண்மைக் காலமாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 88 ஆக அதிகரித்துள்ளது.**

மேலும் 16 பேரைக் காணவில்லை எனவும் 100 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் 492 கால்நடைகள் உயிரிழந்துள்ளன எனவும் மாநில அரசு அறிக்கை வெளியிட்டுள்ளது.

தென்மேற்கு பருவமழை காரணமாக வடஇந்தியாவில் கடும் மழை பெய்து வருகின்றது. குறிப்பாக தலைநகர் டில்லி, உத்தரகாண்ட், இமாச்சல பிரதேசம், உத்தர பிரதேசம், அரியானா மாநிலங்களில் கடும் மழ்ழ பெய்து வருகின்றது.

இதற்கிடையே, கடந்த 3 நாட்களில் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் இமாச்சலப் பிரதேசம் மிகவும் மோசமாகப் பாதிப்பு அடைந்துள்ளது. குறிப்பாக 1,300 வீதிகள், 40 பாலங்கள் சேதமடைந்துள்ளன எனவும் 79 வீடுகள் முற்றிலுமாக தரைமட்டமாகியுள்ளன எனவும் 333 வீடுகள் பகுதியாக சேதமடைந்துள்ளன எனவும் இதனால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிப்படைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (நி-5)


## முதியோர்களை பராமரிக்க மனித உருவ ரோபோ நடைமுறைக்கு வரும் புதிய திட்டம்-சீனா அசத்தல்

(பீஜிங்)

முதியோர்களை கவனமாக பராமரித்து கொள்ளும் வகையில் மனித உருவ ரோபோ சீனாவில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டில், 2035 ஆம் ஆண்டிற்குள் 60 வயதை தாண்டியவர்களின் எண்ணிக்கை 28 கோடியிலிருந்து 40 கோடிக்கும் அதிகமாக உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

அதனால், ஷாங்காயை தலைமையிடமாகக்கொண்ட ஃபோரியர் இன்டலிஜென்ஸ் நிறுவனமே இந்த மனித உருவ ரோபோவை



வடிவமைத்துள்ளது.

இந்த ரோபோவின் மூலம், மருத்துவ சேவையை வழங்குதல், நோயாளிகளை படுக்கையில் இருந்து சக்கர நாற்காலிக்கு மாற்றுதல், பொருட்களை எடுத்துக் கொடுத்தல் போன்ற பணிகளை செய்யும் வகையிலான ரோபோவே தமது குறிக்கோள் என்று ஃபோரியர் இன்டலிஜென்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஜென்கோ தெரிவித்துள்ளார்.

அது மட்டுமன்றி, தற்சமயம் ஆராய்ச்சி நிலையிலுள்ள இந்த ரோபோ அடுத்த 3 ஆண்டுகளிற்குள் உபயோகத்திற்கு வரும் என்றும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## உக்ரைனுக்கு கி...
## மகிழ்ச்சியில் உக்...



(கீவ்)

நேட்டோவில் உக்ரைன் இணை... ஆதரித்ததற்காகவும் கூட்டணியில் ...னராவதற்கு முந்தைய காலத்திற்கு, ...னுக்கு பயனுள்ள பாதுகாப்பு உத்தரவா... வழங்குவதில் பங்கேற்றதற்காகவும் ...ரிஷிசுனக் மற்றும் பிரித்தானியாவுக்... நன்றியுள்ளவனாக இருக்கிறேன் என உ... ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்துள்...

## பாகிஸ்தானுக்கு 3 பில்லியன் டொலர் வழங்க சர்வதேச நாயணநிதியம் அனுமதி

(இஸ்லாமாபாத்)

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தானுக்கு, 3 பில்லியன் அமெரிக்க டொலரை பிணையெடுப்புக்கு வழங்க சர்வதேச நாணயநிதியம் அனுமதியளித்துள்ளது.

கொரோனா தொற்றுக்கு பின்னர், பாகிஸ்தானில் ஏற்பட்ட கடுமையான வெள்ளப் பாதிப்பும் அரசாங்கங்களின் தவறான பொருளாதார கொள்கையும் அந்த நாட்டின் பொருளாதாரத்தை தொடர்ச்சியாக பாதித்தது.

இதனால், தமது நாட்டின் அத்தியாவசிய பொருட்களுக்கான இறக்குமதிக்கான நிதியின்மை மற்றும் கடனை திருப்பி செலுத்த முடியாத நிலைமை உள்ளிட்ட பல நெருக்கடிகளை பாகிஸ்தான் எதிர்நோக்கியது. இதனையடுத்து தமது நட்பு நாடான சவுதிஅரேபியாவிடம் இருந்து 2 பில்லியன் டொலரை பாகிஸ்தான் பெற்றிருந்தது. மேலும், சர்வதேச நாணயநிதியத்தின் உதவியையும் பாகிஸ்தான் கோரியிருந்தது.

அந்தவகையில், பாகிஸ்தானுக்கு, 3 பில்லியன் அமெரிக்க டொலரை பிணையெடுப்புக்கு வழங்க சர்வதேச நாணயநிதியம் அனுமதியளித்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## குளிர்சாதனப்பெட்டி வெடித்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

குளிர்சாதனப்பெட்டி வெடித்ததால் ஏற்பட்ட தீ விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் உயிரிழந்த சம்பவம் பாகிஸ்தானில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானின் லாகூர் நகரிலுள்ள நூர் மெகல்லாவில் உள்ள வீடொன்றிலேயே நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.


இவ்விபத்தினையடுத்து அப்பகுதியில் கரும்புகை சூழ்ந்ததால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புப் படையினர் மிகுந்த போராட்டத்துக்கு மத்தியில் தீயினை அணைத்துள்ளனர். எனினும் வீட்டில் இருந்த 7 மாத குழந்தை, 5 சிறுவர்கள் உட்பட 10 பேரையும் அவர்களால் காப்பாற்ற முடியவில்லை.

இந்நிலையில் பொலிஸாரின் விசாரணையில் குறித்த வீட்டில் திடீரென ஏற்பட்ட மின்கசிவினாலேயே குளிர்சாதனப்பெட்டி வெடித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இத்துயர சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரிப் இரங்கல் தெரிவித்துள்ளார். (நி-5)

## மீத்தேன் - திரவ ஒக்சிஜன் மூலம் இயங்கும் விண்வெளி ரொக்கெட்



(பீஜிங்)

சீனாவை சேர்ந்த தனியார் விண்வெளி நிறுவனமான லாண்ட் ஸ்பேஸ், உலகின் முதல் மீத்தேன் - திரவ ஒக்சிஜன் மூலம் இயங்கும் விண்வெளி ரொக்கெட்டை வெற்றிகரமாக சுற்றுப்பாதையில் செலுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

இதன் மூலம் குறைந்தளவு மாசுபடுத்தும் பாதுகாப்பான, மலிவான மற்றும் மீண்டும் பயன்படுத்தக் கூடிய உந்து சக்தியை கொண்டு விண்கலங்களை உருவாக்கும் தொழில்நுட்பத்தில் சீனா, அமெரிக்காவை முந்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## கிடைத்த மூன்றாவது வெற்றி ...க்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி



லிதுவேனியாவின் வில்னியஸ் நகரின் நேட்டோ உச்சி மாநாட்டில், உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி கலந்து கொண்டார். இதன்போது பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக்கை சந்தித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட பதிவில், "இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் உடன் சந்திப்பு நடந்தது. உச்சி மாநாட்டில் உக்ரைனுக்கு இன்று மூன்றாவது சந்திப்பு மற்றும் மூன்றாவது வெற்றி எனக் குறிப்பிட்டுள்ளார். உக்ரைனின் பாதுகாப்பு தேவைகள், போர்க்களத்தில் உக்ரைனிய இராணுவத்தின் திறன்களை விரிவுபடுத்துவதற்கான கூடுதல் ஒத்துழைப்பு, குறிப்பாக நீண்டதூர ஆயுதங்கள் மற்றும் எதிர்காலத்தில் நவீன மேற்கத்திய விமான போக்குவரத்து குறித்து விவாதித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், சமீபத்தில் லண்டனில் உக்ரைன் மீட்பு மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியதற்காகவும் குறிப்பாக உக்ரைனின் புனரமைப்புக்காக முடக்கப்பட்ட சொத்துக்களை ஒதுக்குவதன் மூலம் நமது நாட்டிற்கு நீண்டகால நிதியுதவியை வழங்க எடுக்கப்பட்ட முடிவுகளுக்காகவும் நான் குறிப்பாக பிரித்தானியாவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்வும் தெரிவித்தார். (நி-5)

## முகநூல் தரிசனம் 165

## இளமை நட்பு முதுமை வரை நீடிப்பது பெரிய வரம்

நண்பர்கள் நால்வர் ஆரம்பக் கல்வி முதல் உயர்தரம் வரை ஒரே பள்ளியில் படித்தவர்கள் அப்போது அந்த ஊரில் இருந்த ஒரே ஒரு சொகுசு ஹோட்டல் அது. உயர்தரத் தேர்வு முடிந்ததும் அந்த ஹோட்டலுக்குப் போய் டீயும் காலையுணவும் சாப்பிடலாம் என்று முடிவு செய்தார்கள். நால்வரும் ஆளுக்கு இருபது ரூபாய் என மொத்தம் 80 ரூபாயை டெபாசிட் செய்து கொண்டனர், அன்று ஞாயிற்றுக்கிழமை, பத்து முப்பது மணிக்கு சைக்கிளில் ஹோட்டலை அடைந்தனர்.

தினேஷ், சந்தோஷ், மகேஷ் மற்றும் பிரவீண் ஆகியோர் தேநீர் மற்றும் காலை உணவு சாப்பிட்டுக் கொண்டே பேச ஆரம்பித்தனர். 35 வருடங்களுக்குப் பிறகு நாம் ஐம்பது வயதை தொட்டிருப்போம். அப்போது உன் மீசை எப்படியிருக்கும், உன் முடி எப்படியிருக்கும், உன் நடை எப்படியிருக்கும், என்றெல்லாம் பேசி சத்தமாக சிரித்துக் கொண்டனர். வார்த்தைக்கு வார்த்தை சில்லறை சிதறுவது போன்று சிரிப்பொலி அவ்விடத்தையே ரம்மியமாக மாற்றிக் கொண்டிருந்தது. அன்றைய நாள் ஏப்ரல் முதலாம் திகதி.

நாம் மீண்டும் ஏப்ரல் முதலாம் திகதி 35 வருடங்களுக்குப் பிறகு இதே ஹோட்டலில் சந்திப்போம் என்று நால்வரும் ஒருமனதாக முடிவு செய்தனர். அதுவரை நாம் அனைவரும் மிகவும் கடினமாக உழைக்க வேண்டும். இதில் எந்த அளவு முன்னேற்றம் நமக்குள்ளே ஏற்படுகிறது என்பதைப் பார்ப்பது சுவாரஸ்யமாக இருக்கும்.

அன்றைய தினம் கடைசியாக ஹோட்டலுக்கு வரும் நண்பன் தான் ஹோட்டல் பில் கட்ட வேண்டும் என முடிவெடுத்துக் கொண்டனர். இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அவருக்கு டீ, ப்ரேக்ஃபாஸ்ட் கொடுத்த வெயிட்டர் முரளி, நான் 35 வருடம் இதே ஹோட்டலில் இருந்தால் நிச்சயமாக உங்களுக்காக இந்த ஹோட்டலில் காத்திருப்பேன் என்று சொல்லி 72 ரூபாய் பில்லை கொடுத்தார். மீதம் 8 ரூபாய் டிப்ஸாக வைத்துக் கொள்ளும்படி சொல்லி விட்டு சிட்டாக சைக்கிளில் பறந்த காட்சி வெயிட்டர் முரளியின் கண்களில் ஸ்டில் போட்டோவாக பதிந்து இருந்தது. மேல் படிப்புக்காக நால்வரும் பிரிந்தனர்.

தினேஷின் அப்பா இடமாற்றத்தினால் அவன் ஊரை விட்டிருந்தான், சந்தோஷ் மேல்படிப்புக்காக அவன் மாமாவிடம் போனான், மகேஸ்ும் பிரவீணும் நகரின் வெவ்வேறு கல்லூரிகளில் அட்மிஷன் பெற்றனர். கடைசியில் மகேஷ்ும் ஊரை விட்டு வெளியேறினான், நாட்கள் நகர்ந்தன. மாதங்கள் உருண்டன. ஆண்டுகள் பல கடந்தன. முப்பத்து ஐந்து ஆண்டுகளில் அந்த நகரத்தில் மாற்றங்களின் தேரோட்டமே ஏற்பட்டது எனலாம். நகரத்தின் மக்கள் தொகை பெருகியது, சாலைகள் விரிந்தன. மேம்பாலங்கள் பெருகின. பெரிய கட்டடங்கள் நகரத்தின் தோற்றத்தையே மாற்றின.

இப்போது அந்த ஹோட்டல் வெறும் ஒரு ஹோட்டல் அல்ல. ஐந்து நட்சத்திர ஹோட்டலாக உருமாறியிருந்த நிலையில், வெயிட்டர் முரளி இப்போது முதலாளி முரளி ஆகி அந்த ஹோட்டலின் உரிமையாளரானார். 35 ஆண்டுகளுக்குப் பிறகு, திட்டமிட்ட ஏப்ரல் முதலாம் திகதி, மதியம், ஹோட்டல் வாசலில் ஒரு சொகுசு கார் வந்தது. தினேஷ் காரில் இருந்து இறங்கி வராந்தாவை நோக்கி நடக்க ஆரம்பித்தான், தினேஷிடம் இப்போது பத்து நகைக்கடைகள் உள்ளன.

ஹோட்டல் உரிமையாளர் முரளியை அடைந்த தினேஷ், இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே புன்னகையைப் பரிமாறிக் கொண்டனர். பிரவீன் சார் உங்களுக்காக ஒரு மாசத்துக்கு முன்னாடியே டேபிள் புக் பண்ணியிருக்கார் என்று முரளி சொன்னார். நால்வரில் முதல் ஆளானதால், இன்றைய பில் கட்ட வேண்டிய அவசியமில்லை என்று தினேஷ் மிகவும் மகிழ்ச்சியடைந்தார், இதற்காக நண்பர்களை கேலி செய்வார்.

ஒரு மணி நேரத்தில் சந்தோஷ் வந்தான், சந்தோஷ் ஒரு பெரிய பில்டர் ஆனான். வயதிற்கேற்ப இப்போது வயதான மூத்த குடிமகன் போல் காட்சியளித்தார்.

இப்போது இருவரும் பேசிக்கொண்டு மற்ற நண்பர்களுக்காக காத்திருந்தனர். மூன்றாவது நண்பன் மகேஸ் அரைமணி நேரத்தில் வந்தான். அவரிடம் பேசியதில் ம்கேஸ் மிகப் பெரிய தொழிலதிபராக மாறியிருப்பது இருவருக்கும் தெரியவந்தது. மூன்று நண்பர்களின் கண்களும் திரும்பத் திரும்ப வாசலுக்குப் போய்க் கொண்டிருந்தன, பிரவீண் எப்போது வருவான்..?

இந்த நேரத்தில் பிரவீண் சாரிடமிருந்து மெசேஜ் வந்திருக்கு, அவர் வர கொஞ்சம் நேரமாகும். நீங்க டீ காலை உணவு ஓடர் பண்ணுங்க, நான் வரேன் என்று சொல்லிச் சென்றார் ஹோட்டல் ஓனர் முரளி. ரெஸ்டாரன்ட் ஈஸ் புக்க்ட் என்று போர்ட் தொங்க விடப்பட்டது. ஹோட்டலின் அனைத்து சிப்பந்திகளும் இந்த நான்கு நண்பர்களுக்கு மட்டுமே சேவைகள் செய்ய வேண்டும் எனப் பணிக்கப்பட்டனர்.

35 வருடங்களுக்குப் பிறகு ஒருவரை ஒருவர் சந்தித்ததில் மூவரும் மகிழ்ச்சியாக இருந்தனர். ஒருவரை ஒருவர் புகழ்ந்தும் இகழ்ந்தும் பெருமையும் கேலியுமாக சில்லறை சிதறல்கள் மீண்டும் அந்த ரம்மியமான இடத்தை மேலும் ரம்மியமாக்கியது. இப்போது மூவருக்கும் பிரவீணின் மேல் கோபமும் வரத் துவங்கியது. மூவருக்கும் பிரவீணைப் பற்றிய தகவல்கள் மட்டுமே இல்லாமல் இருந்தது. நால்வரில் பிரவீண் தான் நன்றாக படிப்பவனாக இருந்தான். சிறந்த அறிவாளியாக இருந்தான்.


பல மணிநேரம் சென்றாலும் பிரவீண் வரவில்லை. மறுபடியும் பிரவீண் சாரின் மெசேஜ் வந்திருக்கிறது. நீங்கள் மூவரும் உங்களுக்குப் பிடித்த மெனுவைத் தேர்ந்தெடுத்து சாப்பிடத் தொடங்குங்கள் என்றார் முரளி. சாப்பிட்ட பிறகு பில்லைக் கட்ட பிரவீண் வந்து விடுவார் என செய்தி வந்திருக்கிறது. வேலைப்பளுவின் காரணத்தால் தாமதமாகிறது. மன்னிக்கவும் என்ற செய்தி பகிரப்பட்டது. இரவு 8 மணிவரை காத்திருந்தாயிற்று.

அப்போது ஒரு அழகிய இளைஞன் காரில் இருந்து இறங்கி, கனத்த மனதுடன் புறப்படத் தயாரான மூன்று நண்பர்களிடம் சென்ற போது, மூவரும் அந்த மனிதனையே பார்த்துக் கொண்டிருந்தனர். அந்த இளைஞனின் புன்னகையும் பல் வரிசையும் பழைய பிரவீணை அவர்கள் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தியது. நான் உங்கள் நண்பனின் மகன் ரவி, என் அப்பா பெயர் பிரவீண் என்று அந்த இளைஞன் சொல்ல ஆரம்பித்தான். இன்று உங்கள் வருகையைப் பற்றி அப்பா சொல்லியிருந்தார். இந்த நாளுக்காக ஒவ்வொரு வருடத்தையும் எண்ணிக் காத்திருந்தார், ஆனால் மூன்று மாதங்களுக்கு முன்பு உடல்நலம் பாதிக்கப்பட்டு இறந்து போனார். என்னை அவர் தாமதமாக சந்திக்கச் சொன்னார், ஏனென்றால் நான் இந்த உலகில் இல்லை என்று தெரிந்ததும் என் நண்பர்கள் சிரிக்க மாட்டார்கள். ஒருவரையொருவர் சந்திக்கும் மகிழ்ச்சியை இழப்பார்கள்.

எனவே தாமதமாக வரும்படி சொல்லியிருந்தார். அவர் சார்பாகவும் உங்களை கட்டித்தழுவச் சொன்னார். ரவி தன் இரு கைகளையும் விரித்தான். மூவரையும் கட்டித் த்ழுவினான். இந்தக் காட்சியை சுற்றி இருந்தவர்கள் ஆவலுடன் பார்த்து கொண்டிருந்தனர், இந்த இளைஞனை எங்கோ பார்த்திருப்போம் என்று நினைத்தனர், என் அப்பா ஆசிரியராக பணியாற்றினார். எனக்கும் கற்றுக் கொடுத்தார். இன்று நான் இந்த மாவட்டத்துக்கு கலெக்டர் என்றார் ரவி. இந்தச் செய்தி ஹோட்டல் உரிமையாளர் திரு முரளிக்கு தெரியும். முரளி முன்வந்து நண்பர்களுக்கு ஆறுதல் கூறி 35 வருடங்களுக்குப் பிறகு அல்ல. 35 நாட்களுக்கு ஒருமுறை நீங்கள் எங்கள் ஹோட்டலில் மீண்டும் மீண்டும் சந்திக்க வாருங்கள். ஒவ்வொரு முறையும் என் பக்கத்திலிருந்து ஒரு பெரிய விருந்து நடக்கும் என்று கூறினார். அனைவரும் ஆச்சரியப்பட்டனர். உறவுகளைச் சந்தித்துக் கொண்டே இருங்கள். நண்பர்களை சந்திக்க வருடக் கணக்கில் காத்திருக்காதீர்கள். யாருடைய முறை எப்போது வரும் என்று தெரியாது. உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களுடன் இருங்கள். உயிருடன் இருப்பதன் முக்கியத்துவத்தை உணருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு



## திருமதி. திருச்செல்வி ஸ்ரீவிசயன்

[பிரதி அதிபர்]

( Sc Trd, B.A, PGDE, SLTS-1)

(17.08.1988-13.07.2023)

### சேவை விபரம்

| | |
|---|---|
| யா/ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண்கள் பாடசாலை | -17.08.1988-19.01.1992 |
| யா/பலாலி ஆசிரியர் கலாசாலை | - 20.01.1992-31.12.1993 |
| யா/ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண்கள் பாடசாலை | -01.01.1994-06.02.1994 |
| யா/கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம் | -07.02.1994-15.06.2010 |
| யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை | -16.06.2010-13.07.2023 |

Congratulations

அறிவுத் தடாகம் நிறைத்து
ஆற்றல் பல அள்ளிக்குவித்து
கல்லூரிப் புகழ் மேலோங்கிட
கடமையே கருத்தாயிருந்தீர்
கனிவு கொள் பேச்சும்
கலைமகள் சுபீட்சமும்
கைவரப் பெற்ற நீங்கள் காலமெல்லாம்
சீரும் சிறப்போடும்
பல்லாண்டு காலம் வாழ
இறையாசியோடு வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம், யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை

(6235)


தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு
Ministry of Labour and Foreign Employment

உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு இன்றே பதிவு செய்யுங்கள்
இணையதளம்: www.glocal.lk

GLOCAL
FAIR 2023
வடக்கின் ஒளிமயம்

அனுமதி இலவசம்



DIGITAL PARTNER
LANKASRI
MEDIA PARTNER
PRINT PARTNER

2023 ஜூலை 15 மற்றும் 16 ஆம் திகதிகளில்
யாழ்ப்பாணம் முற்றவெளி திடலில்...

மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 5.00 மணிவரை உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் உள்ளடங்கலாக பல்வேறு சேவைகள்,
அதன் பின் பிரபல இலங்கை இசைக்குழுக்களுடன் பாடகர்கள் கலந்து சிறப்பிக்கும் இசை நிகழ்ச்சி பி.ப 7.00 மணி தொடக்கம்

மேலும் தகவல்களை அறிந்து கொள்ள ... தொடர்பு கொள்ளுங்கள்: 076 692 3970

(இ)


பதிவு செய்வதற்கான இணையதளம்: WWW.GLOCAL.LK


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# தானியங்களில் பூஞ்சை நச்சு உருவாக்கமும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும்

பூஞ்சை நஞ்சுக்கள் (Mycotoxin) எனப்படுபவை பங்கசுக்களால் இயற்கையாக உருவாக்கப்படுகின்ற நச்சுப் பதார்த்தங்களாகும். இந் நச்சுப் ப்தார்த்தங்கள் இரசாயன ரீதியில் உறுதியானதாகவும் கருதத்தக்க அளவு குறைந்த மூலக் கூற்றுதிணிவுடைய பரந்த இரசாயன மற்றும் உயிரியல் செயற்பாடுகளைக் கொண்டவை. பூஞ்சைகளால் அடிக்கடி தாக்கப்படும் பயிர்களாக தானிய வகைகள் (சோளம், கம்பு அரிசி, கோதுமை), எண்ணெய்வித்துக்கள் (கச்சான்) சோயா, நறுமணப் பொருட்கள் (மிளகாய், மிளகு, மஞ்சள், இஞ்சி) என்பன



கருதப்படுகின்றன.

பூஞ்சை நஞ்சுக்களை (Mycotoxins) உருவாக்கும் பங்கசுக்களை இரண்டு கூட்டங்களாக வகைப்படுத்தலாம்.

1) Field fungi
2) Storage fungi

1. Field fungi ஆனது அறுவடைக்கு முன்பானதாக 70% இற்கு மேற்பட்ட ஈரப்பதன் உள்ள நிலையில் தானியங்களில் வளருகின்றன. மிகவும் அதிகம் கருதத்தக்க field fungi ஆக *Fusarium* பங்கசு இனங்கள் காணப்படுகின்றன.

2. Storage fungi ஆனது அறுவடைக்குப் பின்னும். சேமிக்கும் போதும் 70 - 90% ஆன ஈரப்பதன் உள்ள நிலையில் தானியங்களில் வளர்கின்றன.

கருதத்தக்க Storage fungi ஆக அஸ் பேர்ஜிலஸ் (*Aspergillus)* மற்றும் பென்சிலியம் (*Penicillium*) இனங்கள் காணப்படுகின்றன.

பூஞ்சைகளால் உருவாக்கப்படுகின்ற பூஞ்சை நஞ்சுகளாக (Mycotoxins), அஃப்ளர்டாக்சின் (Aflatoxin), ஒக்ராடாக்சின் (Ochratoxin), சிற்றினின் (Citrinin), பியூமோனிசின் (Fumonisin), செராலினோன் (Zearalenone) மற்றும் போருலின் (Patulin) என்பவை கருதப்படுகின்றன.

### பூஞ்சைத் தொற்றால் பாதிப்படைந்த தானியங்கள்

அஃப்ளாடாக்சின்கள் (Aflatoxin) எனப்படுபவை அஸ்பேர்ஜிலஸ் (*Aspergillus)* எனும் பூஞ்சைகளில் காணப்படுகின்ற ஒருவகைப் பூஞ்சை நஞ்சுக்களாகும். இவ்வகை நஞ்சுக்களை உருவாக்கும் முக்கியமான இனங்கள் அஸ்பேர்ஜிலஸ் பிளேவ்ஸ் (*Aspergillus flavus*) மற்றும் அஸ்பேர்ஜிலஸ் பராசிரிகஸ் (*Aspergillus parasiticus*) ஆகும்.

இப்பூஞ்சை நஞ்சுக்கள் மிகவும் சக்தி வாய்ந்த புற்றுநோய் உருவாக்கும் நஞ்சுக்களாக அறியப்படுகின்றன. பூஞ்சை பிடித்த தானியங்கள் மற்றும் பயிர்களை உட்கொள்ளும் பசுவின் பாலிலும் இவ்வகை நஞ்சுக்கள் Aflatoxin $M_1$ எனும் வடிவில் காண்ப்படுகின்றன. இவை ஈரல் பாதிப்பு மற்றும் அஃப்ளாரொக்சிகோசிஸ் (Aflatoxicosis) என்பவற்றை ஏற்படுத்தக் கூடியவை.

இலங்கையில் கடந்த காலங்களில் தாவ்ரஎண்ணெய்களில் உதாரணமாக தேங்காய் எண்ணெய்யில் (Coconut Oil) Aflatoxin மாசுபடுதலானது கண்டறியப்பட்டது. தேங்காயினை சூரியஒளியில் உலர்த்துவதன் மூலம் 6 %இற்கு குறைந்த ஈரப்பதன் உடைய கொப்பரா தயாரிக்கப்படும்.


கொப்பரா தயாரிப்பின் போதான சுகாதாரமற்ற நிலைமைகளால் *Aspergillus* பங்கசு ஆனது வளர்ச்சியடைந்து Aflatoxins இனை உருவாக்கும். அஃப்பிளாடாக்சின் ஆனது 25-30°C எனும் வெப்பநிலையிலும், 3 - 18% ஆன ஈரப்பதனிலும் உருவாக்கப்படும்.

இவ் Aflatoxins வெப்ப எதிர்ப்புத் தன்மை உடையவை என்பதால் வெப்பத்தால் அவற்றின் தொழிற்பாடு அழிவடையாது. எனவே முறையான, அறுவடைக்குப் பின்னான சேமிப்பு மற்றும் கொப்பரா தயாரிப்புக்களை சரியான முறையில் மேற்கொள்வதன் மூலம் Aflatoxin உருவாக்கத்தைத் தடுக்க முடியும்.

வெப்பநிலை, சாரீரப்பதன், pH மற்றும் பங்கசு திரிபு என்பவை பூஞ்சை நஞ்சுகளின் (Mycotoxins) உருவாக்கத்தில் செல்வாக்கு செலுத்துகின்றன. பொதுவாக 25-30°C இற்கு இடைப்பட்ட வெப்பநிலையும் 88 - 95% இற்கு இடைப்பட்ட சாரீரப்பதனும் 0.78 இலும் அதிகமான நீரின் செயற்பாடும் (Water Activity) பூஞ்சைகளின் வ்ளர்ச்சி மற்றும் அஃப்பிளாடாக்சின் உருவாக்கத்திற்குச் சாதகமான நிலைமைகளாகக் காணப்படுகின்றன.

பூஞ்சைகளானது அமிலம் அல்லது காரத்தைச் சுரப்பதனூடாக அதனைச் சுற்றியுள்ள PH ஐ ஒழுங்கமைக்கும் ஆற்றல் உடையது. உதாரணமாக பென்சிலியம் (*Penicillium)* மற்றும் அஸ்பேர்ஜிலஸ் (*Aspergillus*) எனும் பூஞ்சைகள் குளுக்கோனிக்கமிலம் (Gluconic acid) மற்றும் சிற்றிக்கமிலம் (Citricacid) என்பவற்றை சுரந்து அதனைச் சுற்றி அமில ஊடகத்தை ஏற்படுத்துவதன் மூலம் Aflatoxin இனைத் தயாரிக்கின்றன.

Aflatoxin உருவாக்கத்திற்கு அமில ஊடகமானது (pH 4) அவசியமாகும். pH ஐ கட்டுப்படுத்துகின்ற தன்மையினால் பங்கசினால் ஒரு



விருந்தளிக்கும் கலத்தினுள் (host cell) பிழைத்துக் கொள்ள முடியும். பியூமோனிசின் B1 (Fumonisin B1 ) ஆனது ஒரு கார ஊடகத்தில் உறுதியாக இருக்காது. எனவே இப்பூஞ்சை நஞ்சு உருவாக்கத்திற்கு ஒரு அமில ஊடகம் அவசியம்.

வெப்பநிலையை சீராகப் பேணி சாரீரப்பதனை 70% இற்குக் குறைவாகப் பேணுவதன் மூலமும் முறையான சேமிப்பு உத்திகளைக் கையாள்வதன் மூலமும் பூஞ்சை நஞ்சுக்களின் தொகுப்பைத் தடுக்க முடியும்.

மேலும் பௌதீக; இரசாயன. உயிரியல் முறை தூயதாக்கல் மூலமும் (Physical, chemical and biological decontaminations) பூஞ்சைகளை அழிக்கலாம். அல்லது அவற்றினுடைய தொழிற்பாட்டை நிறுத்தி (inactive) பங்கசு வித்திகளை (Fungal spores ) அகற்றலாம்.

ஆரோக்கியமான தானியங்களிலிருந்து பழுதடைந்த மாசுபட்ட தானியங்களை அகற்றுதல், அடர்த்தியின் அடிப்படையில் வேறுபிரித்தல் (Density segregation) வடிகட்டித்துப்பரவாக்கல் (Sieve cleaning) போன்றவை பௌதீக தூய்மையாக்கலின் போது மேற்கொள்ளப்படும் செயன்முறைகளாகும்.

அமோனியம் ஐதரொக்சைட் ($NH_4OH$), ஐதரோகுளோரிக்கமிலம் ( HCl ), ஐதரசன்பரஒட்சைட் ($H_2O_2$), சோடியம் இருசல்பைற்று மற்றும் குளோரின் போன்ற இரசாயன பதார்த்தங்களை உபயோகப்படுத்தி பூஞ்சை நஞ்சுகள்ள அகற்றுதல் இரசாயன தூயதாக்கல் எனப்படும்.

நுண்ணுயிர்களான பக்ரீரியா மற்றும் மதுவக்கலங்களை பயன்படுத்துவதன் மூலம் பூஞ்சை நஞ்சுகளை அழித்தல் அல்லது குறைந்த நச்சுத்தன்மை உள்ளவையாக மாற்றீடு செய்தல் உயிரியல் தூய்மையாக்கல் எனப்படும்.

பூஞ்சை நஞ்சுக்கள் (Mycotoxins) ஆனது நாட்பட்ட அல்லது கடுமையான நோய் நிலைமைகளை (Chronic and Acute diseases) ஏற்படுத்தும் ஆபத்தைக் கொண்டமையால் அவற்றின் உற்பத்தியைத் தடுக்கும் முறையான நடைமுறைகளைக் கையாளுதல் அவசியம் ஆகும்.

**பிரதுஸ்ஸா செல்வநாயகம்,**
**செயன்முறை வழிகாட்டுநர்,**
**தாவரவியல்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 229





இந்த மனதுதான் என்ன விசித்திரமான இயல்பை உடையது? மன்னாதி மன்னர்களையும் வீராதி வீரர்களையும் நிராகரித்த இந்த மனது வழிப்போக்கனாக வந்த இவ்வாலிபனிடம் ஏன் இவ்வளவு சிரத்தை கொள்கிறது? இவன் ஏற்றுக் கொண்ட காரியத்தை வெற்றியுடன் முடித்துக் கொண்டு பத்திரமாய்த் திரும்ப வேண்டுமே என்று ஏன் இவ்வளவு கவலைப்படுகிறது?...

"அக்கா! என்ன யோசிக்கிறீர்கள்?" என்ற வானதியின் குரல் குந்தவையை இந்த உலகத்துக்குக் கொண்டு வந்தது. "ஒன்றுமில்லை வானதி! அந்த வாலிபனுடைய அகம்பாவ சுபாவத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். அவனிடம் என் தம்பிக்கு ஏன் செய்தி சொல்லி அனுப்பினோம் என்று இப்போது தோன்றுகிறது..."

"ஆம், அக்கா! அவன் ரொம்பப் பொல்லாதவன்தான்! பெரிய கொள்ளைக்காரன் என்று கூடச் சொல்லத் தோன்றுகிறது.." "அது என்ன? கொள்ளைக்காரன் என்று எதனால் சொல்கிறாய்?"

"சாதாரண கொள்ளைக்காரர்கள் பொன், வெள்ளி முதலிய பயனற்ற பொருட்களைக் கொள்ளையடிப்பார்கள். இந்த வாலிபன் சோழ வள நாட்டின் குல தெய்வத்தையே கொள்ளையடித்துக் கொண்டு போய் விடுவான் என்று எனக்குப் பயமாயிருக்கிறது. தாங்கள் அதற்கு இடங்கொடுக்க மாட்டீர்கள் அல்லவா?" என்று வானதி கூறினாள்.

"அடி கள்ளி! உன்னைப் போல் என்னையும் நினைத்து விட்டாயா? அப்படியெல்லாம் ஒருநாளும் நடவாது!" என்றாள் குந்தவை.

யானை திரும்பிச் சிறிது தூரம் சென்ற போது வீதியில் ஓரிடத்தில் பெண்கள் பலர் கூட்டம் கூடி நிற்பதை அரசிளங்குமரிகள் பார்த்தார்கள். யானையை நிறுத்தச் செய்து விட்டு, "ஏன் கூட்டம் கூடி நிற்கிறீர்கள்? ஏதாவது சொல்ல வேண்டுமா?" என்று இளையபிராட்டி குந்தவை கேட்டாள்.

அந்தப் பெண்களில் ஒருத்தி முன் வந்து, "தாயே! இலங்கையில் உள்ள எங்கள் புருஷர்களைப் பற்றி ஒரு செய்தியும் இல்லையே! அவர்களுக்கு இங்கிருந்து அரிசி அனுப்பக் கூடாதென்று தஞ்சாவூர்க்காரர்கள் தடுத்து விட்டார்களாமே? வயிற்றுக்குச் சாப்பாடு இல்லாமல் எப்படி அம்மா, அவர்கள் சண்டை போட முடியும்?" என்று கேட்டாள்.

"அதற்காக நீங்கள் கவலைப் படவேண்டாம். மாமல்லபுரம் துறைமுகத்திலிருந்து அவர்களுக்கு வேண்டிய தானியம் போய்க் கொண்டிருக்கிறது. தஞ்சாவூர்க்காரர்கள் என்ன செய்தாலும் உங்கள் இளவரசர் சும்மா விட்டு விடுவாரா? சோழ நாட்டு மகா வீரர்கள் பட்டினி கிடக்கும் படி பார்த்துக் கொண்டிருந்து விடுவாரா!" என்றாள் இளையபிராட்டி. வேறொரு சந்தர்ப்பமாயிருந்தால், குந்தவை அங்கேயே இறங்கி அந்தப் பெண்களுக்கு மேலும் சமாதானம் சொல்லியிருப்பாள். இப்போது அவளுடைய மனம் வேறுவிதமான சஞ்சலத்துக்கு உள்ளாகியிருந்தபடியால் தனிமையை விரும்பினாள். யானை அரண்மனையை நோக்கிச் சென்றது.

### ஐம்பத்தோராம் அத்தியாயம் மாமல்லபுரம்

வாசகர்கள் ஏற்கெனவே நன்கு அறிந்துள்ள மாமல்லபுரத்துக்கு இப்போது அவர்களை அழைத்துச் செல்ல விரும்புகிறோம்.

மகேந்திர பல்லவரும் மாமல்ல நரசிம்மரும் இத்துறைமுகப் பட்டினத்தை அற்புதச் சிற்ப வேலைகளின் மூலம் ஒரு சொப்பனபுரியாகச் செய்த காலத்திற்குப் பிறகு இப்போது முந்நூறு ஆண்டுகளுக்கு மேலேயே ஆகிவிட்டன. நகரத்தின் தோற்றம் ஓரளவு மங்கியிருக்கிறது. மாறுதல் நம் மனத்துக்கு மகிழ்ச்சி தரவில்லை.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கடவுளின் தரிசனம் வேண்டி பலகாலம் தவம்

கடவுளின் தரிசனம் வேண்டி பலகாலம் தவம் இருந்த ஒரு நாட்டின் மன்னனுக்கு ஒருநாள் கடவுளின் தரிசனம் கிடைத்தது. பெரும் மகிழ்ச்சி அடைந்த மன்னன் கடவுளிடம் ஒரு வரம் கேட்டான்.

கடவுளும் என்ன வரம் வேண்டுமோ கேள் என்று மன்னனிடம் சொல்ல, மன்னனும் தன்னுடைய விருப்பத்தை கடவுளிடம் வரமாக கேட்டான்.

எப்படி நீங்கள் எனக்கு தரிசனம் தந்தீர்களோ? அதேபோல, ராணியாருக்கும் மந்திரி மற்றும் அரச குடும்பத்தினருக்கும் நாட்டின் பிரஜைகள் அனைவருக்கும் நீங்கள் காட்சி தர வேண்டும் என்று வரத்தை கேட்டான்.



இது அவரவர்களின் கர்ம வினையைப் பொறுத்தே அமையும் இருந்தாலும் மன்னன் வரத்தை கேட்டு விட்டதால் கடவுளும் அதற்கு சம்மதித்தார்.

"அதோ தெரிகின்றதே ஒரு உயர்ந்த மலை அங்கே அனைவரையும் அழைத்துக் கொண்டு வா, காட்சி தருகின்றேன்" என்று சொல்லி மறைந்தார்.

மன்னனும் நாட்டில் அனைவருக்கும் தண்டோரா போட்டு அரச குடும்பத்தினருடனும் மக்களுடனும் மலையை நோக்கி புறப்பட்டான்.

அனைவரும் கடவுளைக் காணும் ஆவலில் மலையேற துவங்கினர். சிறிது உயரம் சென்றவுடன். அங்கே செம்பு பாறைகள் தென்பட்டன.

உடனே, மக்களில் நிறைய பேர் செம்பை மடியில்கட்டிக்கொண்டு, சிலர் பாறைகளை உடைத்து தலையில் வைத்துக் கொள்ளவும் ஆரம்பித்தனர்.

மன்னன் "அனைவருக்கும் கடவுளின் காட்சி கிடைக்க போகின்றது. இதெல்லாம் அதற்கு முன்னால் ஒன்றுமே இல்லை அனைவரும் வாருங்கள்" என்று உரக்க சபதமிட்டான்.

அதற்கு "மன்னா இப்பொழுது இது தான் தேவை கடவுளின் காட்சியை வைத்து என்ன செய்வது" என்று ஒட்டுமொத்தமாக கூட்டத்தில் குரல் எழும்பியது.

எப்படியோ போங்கள் என்று மீதி இருப்பவர்களை அழைத்துக்கொண்டு மலையேற துவங்கினான் மன்னன். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மிகப்பெரிய சந்தர்ப்பம் வாழ்க்கையில் ஒரே ஒரு முறைதான் கிடைக்கும். அதைச் சரியாகப் பயன் படுத்திக் கொண்டு வெற்றி காண முயல வேண்டும்.
— மெக்கலன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மஹாளயபட்சம் போல இது மோடிக்கு கடிதம் அனுப்பும் பட்சம்

மஹாளய பட்சம் என்பது புரட்டாதி மாதத்தில் வருவது.

பொதுவில் நம்மவர்கள் மாளயம் என்று உச்சரிக்கின்ற மஹாளய பட்சத்தில் தென் புலத்தார் பொருட்டு தர்ப்பணம் செய்து, அன்ன ஆகாரம் படைத்து அவர்களை நினைந்தேற்றுவர்.

இங்கு மஹாளய பட்சம் என்பது புரட்டாதி மாதத்தில் மட்டும் வருவதாகும்.

ஆக, ஏனைய மாதங்களில் மஹாளய பட்சம் வருவதில்லை.

இங்கு மஹாளய பட்சம் போல இப்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நம் தமிழ் அரசியல் தலைவர்கள் கடிதம் எழுதுகின்ற பட்சம் வந்துள்ளதுபோல நிலைமை அமைந்துள்ளது.

ஆம், பிரதமர் மோடி அவர்கள் இந்தியாவின் பிரதமராக இரண்டாவது தடவையும் தொடர்கிறார்.

2024இல் அங்கு பொதுத் தேர்தல் இடம் பெறவுள்ளது. அதற்கான ஏற்பாடுகளும் நடந்தாகின்றன.

இந்நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் அண்மையில் ஒன்றிணைந்த தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டு என்பன தனித்தனியாக இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதங்களை அனுப்புகின்றன.

இந்தக் கடிதம் எதற்கானதென ஆராய்ந்தால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் இந்தியாவுக்குச் சென்று பிரதமர் மோடியைச் சந்திக்கவுள்ளார்.

எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமர் மோடியைச் சந்திப்பதற்கு முன்னதாக நாம் கடிதம் அனுப்பி வைப்பது நல்ல விடயம் என்பதில் மாற்றுக்கருத்திருக்க முடியாது.

ஆனால் நாம் கேட்பதெல்லாம் ஜனாதிபதி ரணில் இந்தியாவுக்குச் சென்று பிரதமர் மோடியைச் சந்திக்கும்போதுதான் இலங்கை இனப்பிரச்சினை பற்றிப் பிரதமர் மோடியால் கதைக்க முடியுமா? மற்றும்படி இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றி பிரதமர் மோடி கதைப்பது கடினமா? என்ற விடயங்கள் நமக்குப் புரியாமல் உள்ளன.

உண்மையில் இனப் பிரச்சினைக்கான தீர்வு நமக்குத் தேவையென்றால், பிரதமர் மோடிக்கு நாம் தொடர்ச்சியாகக் கடிதம் எழுதியிருக்க வேண்டும்.

தவிர, இடையிடையே இந்தியாவுக்குச் சென்று பிரதமர் மோடியைச் சந்தித்து எங்கள் பிரச்சினைக்கு எப்படியாவது தீர்வை பெற்றுத் தாருங்கள் என்று கேட்டிருக்க வேண்டும்.

இதையும் கடந்து, பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபோது, அவரைச் சந்தித்து நீங்கள் நினைத்தால் – மனம் வைத்தால் பிரதமர் மோடி ஊடாக எங்கள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று கூறியிருக்க வேண்டும்.

அத்தோடு அண்ணாமலையுடன் மிக நெருக்கமான உறவைப் பேணியிருப்பதும் அவசியம்.

ஆனால் இவை எதனையும் செய்யாத நம் தமிழ்த் தலைவர்கள் இப்போது பிரதமர் மோடிக்கு தனித்தனியாகக் கடிதங்களை அனுப்புகின்றனர்.

இவ்வாறு தனித்தனியாகக் கடிதங்களை அனுப்புவதன் மூலம் ஐயா! பிரதமர் மோடி அவர்களே! நீங்கள் எங்களை ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாருங்கள் என்று கூறினீர்கள்.

ஆனால் நாங்கள் இன்னமும் ஒன்றுபடவில்லை. ஒன்றுபடவும் மாட்டோம். அதை உங்களுக்குத் தெரியப்படுத்தவே தனித்தனியாக இக்கடிதங்களை அனுப்புகின்றோம் என்பதுபோல நிலைமை அமைகிறது.

என்ன செய்வது நம் தலையெழுத்து இது வென்றால், அதை யாரால்தான் மாற்றி எழுத முடியும்.

# கர்ப்பிணிகள்,பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து கிடைப்பது கட்டாயமாகும்

## சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கையிடம் வலியுறுத்து

இலங்கை அரசாங்கம், அனைத்து கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு, போதியளவு ஊட்டச்சத்து கிடைப்பதை கட்டாயமாக உறுதிசெய்ய வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பான தமது புதிய ஆய்வு தொடர்பில் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், சர்வதேச மன்னிப்புச் சபை இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளது.

வீழ்ச்சியடைந்த வருமானம் வாழ்வாதார இழப்பு மற்றும் பணவீக்கம் என்பன பெண்களின் கொள்வனவு திறனைக் குறைத்துள்ளன.

அத்துடன் தாய்வழி ஊட்டச்சத்தை அதிகரிப்பதை நோக்கமாக கொண்ட அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட திட்டங்களும் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் தீவிரம் காரணமாக, சுகாதாரம் மற்றும் போஷாக்கு என்பன பின்னடைவை சந்தித்துள்ளன.

கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஆரோக்கியத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்பு சபையின் தெற்காசியாவிற்கான பிரதி பிராந்திய பணிப்பாளர் தினுஷிகா திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## எரிபொருள் நிரப்பு நிலையம் மீது தாக்குதல்

(கொழும்பு)

பேருவளை பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்குள் நுழைந்து ஊழியர்களை தாக்கி உடமைகளுக்கு சேதம் விளைவித்த 5 பேரை பேருவளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு குறித்த கும்பல் குடித்துவிட்டு இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு எரிபொருள் எடுப்பதற்காக வந்துள்ளனர்.

QR குறியீடு இல்லாததால் எரிபொருள் நிலைய ஊழியர் எரிபொருளை வழங்க மறுப்பு தெரிவித்த காரணத்தால் குறித்த கும்பல் ஊழியர்களை தாக்கி சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## நடமாடும் சேவை

ஆயுர்வேத வைத்திய சபையால் நடாத்தப்படும் வடமாகாண ரீதியிலான நடமாடும் சேவையானது எதிர்வரும் 18 ஆம் திகதி வவுனியா சிவபுரம் ஆதார சித்த மருத்துவ மனையில் முற்பகல் 8 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணி வரையும் மறுநாள் 19 ஆம் திகதி பரந்தன்- பூநகரி வீதியில் அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்ட சித்த மருத்துவ மனையில் மு.ப 8.00 தொடக்கம் பி.ப 12.30 வரை நடைபெறவுள்ளது.

அதேவேளை மன்னார் மாவட்ட சித்த மருத்துவ மனையில் எதிர்வரும் 19 ஆம் திகதி பிற்பகல் 1.30 தொடக்கம் 4.00 மணி வரையும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி முற்பகல் 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை யாழ்ப்பாணம் கைதடியில் அமைந்துள்ள சித்த போதனா வைத்திய சாலையிலும் இடம்பெறவுள்ளதாக ஆயுர்வேத வைத்திய சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வெட்டுக்காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு

(காலி)

காலி-அம்பலாங்கொடை பிரதேசத்தில் நேற்றுக் காலை ஆண்ஒருவரின் சடலம் வெட்டுக்காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அப் பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய எஸ்.பி லசந்த என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 10 மணிக்குப் பின்னர் வீட்டிலிருந்து காணாமல்போன குறித்த இளைஞர் நேற்று காலை 6 மணியளவில் வீட்டுக்கு 200 மீற்றர் தொலைவில் வெற்றுக்காணியொன்றில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்ட சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7)

## கண் சத்திர சிகிச்சை மேற்கொண்ட பெண் மரணம்

(கொழும்பு)

கண் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பெண் உயிரிழந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பாணந்துறை பகுதியை சேர்ந்த 72 வயதான பெண்ணொருவர் திடீரென ஏற்பட்ட நோய் நிலைமையால் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பெண் கண் சத்திர சிகிச்சைக்காக கடந்த 6ஆம் திகதி கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எனினும் அவருடன், சத்திரசிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டிருந்த ஏனைய அனைவரும் சிகிச்சையளிக்கப்பட்டு வீடு திரும்பியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில், குறித்த பெண்ணின் உறவினர் ஒருவர் வைத்தியசாலை அதிகாரிகளிடம் வினவியுள்ளார்

அதற்கு பதிலளித்த வைத்தியசாலை அதிகாரிகள் குறித்த பெண்ணின் கண் சத்திரசிகிச்சையை உரிய முறையில் முன்னெடுக்க முடியவில்லை என தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக குறித்த பெண்ணை தொடர்ந்தும் வைத்தியசாலையில் வைத்திருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளனர். எனினும் கடந்த 10ஆம் திகதி திடீரென நோய் நிலைமைக்கு உள்ளானதன் காரணமாக அவர் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். இந்தநிலையில், குறித்த மரணம், சந்தேகத்திற்கிடமானது என அவரது குடும்பத்தினர் குறிப்பிடுகின்றனர்.

முன்னதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில், ஒருவர் உயிரிழந்திருந்தாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## மஹோற்சவம்

(உகந்தை)

உகந்தை மலை முருகன் ஆலய வருடாந்த ஆடிவேல் மஹோற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

15 நாட்கள் தொடர்ந்தும் பூசைகள் இடம்பெற்று எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி தீர்த்தோற்சவம் இடம்பெற்று மறுநாள் வியாழக்கிழமை வைரவர் பூசையுடன் இவ்வருடத்திற்கான உற்சவம் இனிதே நிறைவு பெறவுள்ளது.

அத்துடன் உகந்தை மலை முருகன் ஆலயத்திற்கு பாதயாத்திரை செல்லும் ஏற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றது.

இலங்கையில் காணப்படும் வரலாற்று சிறப்பு மிக்க தலங்களில் இதுவும் ஒன்றாகுமென்பதோடு முருகக் கடவுளின் சூரசம்ஹார வரலாற்றுடன் மிக நெருங்கிய தொடர்புடைய திருத்தலமாக இது விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ராஜிதவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன உட்பட மூவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் முதற்கட்ட விசாரணை நேற்று முன்தினம் கொழும்பு உயர் நீதி மன்றத்தால் அறிவிக்கப்பட்டது.

அதன்படி நீதிபதி நவரட்ண மாரசிங்கவால் குறித்த வழக்கு செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு மோதரை மீன்பிடித் துறைமுகத்தை தனியார் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடும்போது அரசுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியதற்காக முன்னாள் அமைச்சர் மற்றும் மேலும் இருவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக நஷ்ட ஈட்டை பெற தயார் இல்லை

## மன்னார் உறவுகள் தெரிவிப்பு

(மன்னார்)

நாங்கள் ஒருபோதும் மரணச்சான்றுதல் மற்றும் நஷ்ட ஈட்டை பெற்றுக் கொள்ள தயார் இல்லை. ஒப்படைக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கு, உறவுகளுக்கு என்ன நடந்தது?, நாங்கள் பணத்திற்காக இத்தனை வருடங்கள் வீதியில் நின்று போராடவில்லை என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலக அதிகாரிகள் (ஓ.எம்.பி) மரணச் சான்றிதழ் மற்றும் நஷ்டஈட்டை பெற்றுக் கொள்ளுமாறு கதைத்து பார்த்தனர்.

ஆனால் அந்த விடயம் சரிவரவில்லை. அதனை தொடர்ந்து ஒவ்வொரு அம்மாக்களையும் அழைத்து பேசி பார்த்தனர். அதுவும் சரி வரவில்லை. ஆனால் தற்போது அரச திணைக்களங்களை அழைத்து பேசுகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு மரணச்சான்றிதழ் மற்றும் நஷ்ட ஈடு வழங்கும் நடவடிக்கை ஒருபோதும் இடம் பெறாது.

குறித்த மரணச்சான்றிதழ் மற்றும் நஷ்டஈடு எங்களுக்கு தேவை இல்லை என்பதை ஓ.எம்.பி அலுவலக அதிகாரிகளுக்கு நாங்கள் தொடர்ந்தும் கூறி வருகின்றோம்.

நாங்கள் நீதியையே கேட்டு நிற்கின்றோம். எமது பிள்ளைகளுக்கு,உறவுகளுக்கு என்ன நடந்தது?,நாங்கள் பணத்திற்காக இத்தனை வருடங்கள் வீதியில் நின்று போராடவில்லை.

நாங்கள் ஒருபோதும் மரணச்சான்றுதல் மற்றும் நஷ்ட ஈட்டை பெற்றுக்கொள்ள தயார் இல்லை.

அரச திணைக்களத்தை வைத்து கதைக்கும் ஓ.எம்.பி அலுவலகத்தினர் மீண்டும் எங்களுடன் கதையுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.(4-5-285)

# புனரமைக்கப்பட்ட ரயில் பாதை நேற்று மீண்டும் திறந்து வைப்பு

(அநுராதபுரம்)



அநுராதபுரத்திலிருந்து ஓமந்தை வரையிலான நவீன மயமாக்கப்பட்ட புகையிரத பாதை உத்தியோகபூர்வமாக பொது மக்களின் போக்குவரத்திற்காக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. "மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் சோதனை ஓட்டத்திற்காக குளிரூட்டப்பட்ட சொகுசு வண்டிகள் சேர்க்கப்பட்டுள்ளன" என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதேவேளை அநுராதபுர ரயில் நிலைய வளாகத்தில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வின் சின்னம் ரயில் நிலைய அமைச்சரினால் அரிய "படு கரடா" செடி நாட்டப்பட்டது.

இந்நிலையில் நவீன மயமாக்கப்பட்ட தண்டவாளத்தின் மத்தியில் பாரம்பரிய இந்து பாரம்பரியங்களை முடித்து அநுராதபுரத்திலிருந்து பயணத்தை தொடங்கியதாக தெரிவிக்கப்படுகிறது. (4-5-316)

# டெங்கு பரவலை கட்டுப்படுத்தும் சுத்திகரிப்பு பணியாளர்கள் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ரீதியாக டெங்கு பரவலைக் கட்டுப்படுத்தும் சுத்திகரிப்பு பணியை மேற்கொள்ளும் ஊழியர்கள் நேற்று வியாழக்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்பாக இடம்பெற்ற குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் சம்பள உயர்வைக் கோரியும் நிரந்தர நியமனத்தை அமுல்படுத்துமாறும் குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த 40 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

ஏழு வருடங்களுக்கு மேலாக டெங்கு நோயை கட்டுப்படுத்தும் குறித்த பணியை தாம் மேற்கொண்ட போதும் தமக்கு இது வரையும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என்றும் தமக்கான ஊதியம் 22,000 வரையே கொடுக்கப்படுகிறது எனவும் இதனைக் கொண்டு தமது வாழ்வாதாரத்தினை கொண்டு செல்ல முடியாது எனவும் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். (4-5-33)

## சிறுமியை துஷ்பிரயோகம் செய்தவருக்கு 12 ஆண்டுகள் கடூழிய சிறை

(கண்டாவளை)

பதினான்கு வயதுடைய சிறுமியை அடித்து துன்புறுத்தி பாலியல் துஷ்பிரயோகம் செய்தவருக்கு 12 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும் தவறும் பட்சத்தில் 12 மாத கால சாதாரண சிறைத் தண்டனையும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு மூன்று இலட்சம் ரூபா நஷ்ட ஈட்டை செலுத்துமாறும் கிளிநொச்சி மேல்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு செட்டிக்குளத்தில் பதின்நான்கு வயதுடைய சிறுமி ஒருவரை துன்புறுத்தி பாலியல் குற்றம் புரிந்த குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட குற்றவாளிக்கு நேற்று முன்தினம் கிளிநொச்சி மேல்நீதி மன்றத்தில் மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.(4-5-315)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகாத்மா காந்தி ஆசிரமத்தால் அமரர் திருமதி சரசுவதி தம்பிப்பிள்ளை நினைவாக நடைமுறையில் காந்தியக் கொள்கைகள் என்னும் தலைப்பில் 18 வயது முதல் 25 வயதுடைய இளைஞர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 29 ஆம் திகதி யாழ்ப்பாணம் கிறீன் க்ராஸ் ஹோட்டலில் காலை 9 மணிமுதல் மாலை 5.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கிலே கலந்து கொள்பவர்களில் குறிப்பிட்ட தகுதிகள் உடைய இருவருக்கும் கல்விக்கான புலமைப் பரிசில் வழங்கப்படும்.

ஒரு குறிப்பிட்ட இடங்களே இருப்பதால் இதற்கு முன்பதிவு அவசியம். விண்ணப்பப்பத்திரங்களைப் பெற mgandhiadhramam@gmail. com என்னும் முகவரிக்கு ஒரு மின்னஞ்சலை அனுப்ப முடியும் 22.07.2023 இற்கு முன்னதாக அனுப்பப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5)

# பை உற்பத்தியாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

தோற்பொருள் உற்பத்தியான பை உற்பத்தி செய்யும் யாழ். மாவட்ட தொழில் முயற்சியாளர்களுக்கு பை (bag) வடிவமைப்பு விருத்தி தொடர்பான எட்டு நாட்கள் கொண்ட தொழில்நுட்ப மாற்றுப் பயிற்சி ஓகஸ்ட் 27 முதல் செம்டெம்பர் 3 வரை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தோற்பொருள் அபிவிருத்தி பிரிவினால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் யாழ்.மாவட்ட செயலகத்தில் இயங்கும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ்.கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மாகாண பணிப்பாளர் சி.சிவகெங்காதரன் அறிவித்துள்ளார். (4-5)

## சிறந்த தொழில்முயற்சியாளருக்கான கைத்தொழில் சிறப்பு விருதுகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய ரீதியில் நுண்ணிய. சிறிய. நடுத்தர மற்றும் பாரிய தொழில் முயற்சிகளை இயக்கும் சிறந்த தொழில் முயற்சியாளர்களை தெரிவு செய்து அவர்களிற்கான விருதுகள் வழங்கும் நிகழ்வை கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலில், இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை மேற்கொள்ளவுள்ளது.

இத்தெரிவிற்கான விண்ணப்பப்படிவங்கள் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் (ஐ.டி.பீ) மாவட்ட அலுவலகங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 31.07.2023 ஆம் திகதிக்கு முன்னர் தொழில் முயற்சியாளர்கள் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு யாழ்.கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மாகாணப் பணிப்பாளர் சி.சிவகெங்காதரன் அறிவித்துள்ளார்: (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 240 | 240 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 800 | 500 | 600 | 500 |
| தக்காளி | 600 | 450 | 520 | 550 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 200 | 300 |
| கோவா | 300 | 260 | 240 | 300 |
| கரட் | 360 | 380 | 400 | 450 |
| பூசணி | 100 | 100 | 90 | 150 |
| புடோல் | 180 | 180 | 120 | 220 |
| வாழைக்காய் | 160 | 150 | 80 | 150 |
| சின்ன வெங்காயம் | 420 | 360 | 350 | 500 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 140 | 150 |
| பாகற்காய் | 500 | 500 | 400 | 500 |
| வெண்டக்காய் | 240 | 200 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 180 | 250 |
| பயற்றங்காய் | 400 | 300 | 350 | 300 |
| லீக்ஸ் | 360 | 300 | 240 | 300 |
| பீற்றூட் | 420 | 380 | 200 | 400 |
| கறிமிளகாய் | 350 | 450 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 550 | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 260 | 200 | 150 | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 60 | 120 |
| தேசிக்காய் | 250 | 250 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 100 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 300 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 300 | 250 | 300 | 450 |
| முள்ளங்கி | 160 | 140 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 50 | 35 | 40 | 60 |
| ஈரப்பலா | 160 | 150 | 150 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு...

இந்திய அரசாங்கத்தின் கடன் உதவித் திட்டத்தின் மூலம் இலங்கை போக்குவரத்து சபைக்கு வழங்கப்பட்ட 24 புதிய பேருந்துகள் யாழ்ப்பாணத்தில் வைத்து வடக்கு மாகாண இ.போ.ச. சாலைகளுக்கு கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் பேருந்துகள் கையளிக்கப்பட்டன.

அந்தவகையில் வவுனியா 4, கிளிநொச்சி 4, மன்னார் 3, முல்லைத்தீவு 3, யாழ்ப்பாணம் 4, பருத்தித்துறை 3, காரைநகர் 3 என 24 பேருந்துகள் வடமாகாண சாலைகளுக்கு பகிரப்பட்டது.

குறித்த நிகழ்வில் போக்குவரத்து பெருந்தெருக்கள் ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் எஸ்.எம்.டி.அல்விஸ், பாராளுமன்ற உறுப்பினர்களான ஜயந்த கெட்டகொட, ரகுமான் மற்றும் போக்குவரத்து சபை ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7,33)

## ஐந்து மாதங்...

தது.

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

அநுராதபுரத்தில் இருந்து ஓமந்தை வரையிலான நவீனமயமாக்கப்பட்ட வடக்கு ரயில் பாதைக்காக இந்திய அரசாங்கம் இலங்கை ரூபாய் 3 ஆயிரம் கோடிகளை வழங்கிய நிலையில் நேற்றைய தினம் புகையிரத வெள்ளோட்ட நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். இந்திய துணைத் தூதர் ராகேஷ் நடராஜ் ஜெபாஸ்கர், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பிரத்தியேகச் செயலாளர் குலேந்திரன் சிவராம், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறிமோகன் மற்றும் வட பிராந்திய இலங்கை போக்குவரத்து சபையின் பிரதான முகாமையாளர் உட்பட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (ம-7,104)

## மலையகம்...

லாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானால் இதற்கான அமைச்சரவை பத்திரம் முன்வைக்கப்பட்டு, அதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி அரச அங்கீகாரத்துடன் "மலையகம் - 200" விழாவை எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் வாரத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (ம-7)

## அரசமைப்பு...

டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

குறித்த கூட்டத்தில் ஆணைக்குழு உறுப்பினர்களின் நியமனம் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## இந்தியாவுக்கு...

வடக்குக்கான புகையிரதப் பாதையை திருத்துவதற்காக இந்திய அரசாங்கம் (98 மில்லியன் அமெரிக்க டொலர்) 3 ஆயிரம் கோடி இலங்கை ரூபாய்களைத் தந்துதவிய இந்தியாவுக்கு நன்றி தெரிவிப்பதாக போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த பரீட்சார்த்த வெள்ளோட்ட புகையிரத சேவையில் யாழ்ப்பாணம் வருகை தந்த நிலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐந்து மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்குமான புகையிரத சேவைகள் புகையிரதப் பாதை திருத்துவதற்காக நிறுத்தப்பட்டது.

இந்திய அரசாங்கம் அநுராதபுரம் தொடக்கம் ஓமந்தை வரையிலான புகையிரத பாதைகளை திருத்துவதற்கு பாரியதொரு நிதி பங்காளிப்பை வழங்கியமை வடக்குக்கான நிறுத்தப்பட்ட புகையிரத மார்க்கத்தை விரைவுபடுத்துவதற்கு உதவியாக அமைந்தது என்றார். (ம-7,33,104)

## பொருளாதார...

அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக புதிய வருமான வழிகளை உருவாக்குவதற்கான மூலோபாயங்களைக் கண்டறிவதற்காக நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்க மற்றும் கலால் திணைக்களங்கள் என்பவற்றின் வருமான இலக்குகளை அடைவதற்கான முறையான சூழலை உருவாக்குதல், அரசாங்க வருவாயை அதிகரிப்பதற்கான புதிய வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் அதற்கான டிஜிட்டல் பொருளாதார பின்னணியை தயார் செய்தல் தொடர்பான முன்மொழிவுகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த முன்மொழிவுகள் குறித்து மேலும் கலந்துரையாடி, இதனை பாராளுமன்ற முறைமைகள் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இராஜாங்க அமைச்சருக்கு பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், இந்த முன்மொழிவுகளை அமுல்படுத்துவதில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்திய ஜனாதிபதி, பரந்த ஊடகப் பிரசாரத்தின் ஊடாக இது தொடர்பாக முறையாக மக்களுக்கு அறிவிக்க வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

வரி வருமானம் முறையாக வசூலிக்கவில்லை என்பதுதான் இன்றைய பொருளாதார நெருக்கடியில் முன்வைக்கப்படும் முக்கிய குற்றச்சாட்டுகளில் ஒன்று என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, வருமான வ்ரி செலுத்த வேண்டிய சில தரப்பினர் வருமான வரி செலுத்துவதில்லை என்று குற்றஞ்சாட்டினார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள முயற்சிக்கும் இந்த சமயத்தில், நாட்டில் முழுமையான நிதி ஒழுக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

முதலில் அரச செலவினங்களைக் கட்டுப்படுத்தவேண்டும் என்றும் அதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம-7)

## சட்டத்...

நாட்டின் முழு நீதித்துறை அமைப்பிலும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் கற்பழிப்பு தொடர்பான சுமார் 24,700 வழக்குகள் இருப்பதாகவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

'இந்த நாட்டின் உயர் நீதிமன்றங்களில் உள்ள 29,700 வழக்குகளில், 9,800 வழக்குகள் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் கற்பழிப்பு தொடர்பானவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது உயர் நீதிமன்றங்களில் 33% வழக்குகள் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் கற்பழிப்பு தொடர்பான வழக்குகள்.

இந்த நிலைக்கு நாம் வருந்த வேண்டும். சட்டத்தால் மட்டும் சமூகத்தை சரியான பாதைக்கு கொண்டு செல்ல முடியாது. சமூக நலனுக்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

### தன நிதானய

திகதி - 2023.07.13
சீட்டிழுப்பு இலக்கம் - 1204
ஆங்கில எழுத்து: K | வெற்றி இலக்கங்கள்: 13 18 33 51 | K
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

### கொவிசெத

திகதி: 2023.07.13 | சீட்டிழுப்பு இலக்கம்: 3416
ஆங்கில எழுத்து: T | வெற்றி இலக்கங்கள்: 20 22 32 58
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி: 13/07/2023
சீட்டிழுப்பு இலக்கம்: 1522
வெற்றி எழுத்து: I | சுப்பர் இலக்க: 03 | வெற்றி இலக்கங்கள்: 11 31 39 56

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி: 2023.07.13
சீட்டிழுப்பு இலக்கம்: 483
மீனம் | வெற்றி இலக்கங்கள்: 18 25 28 29 | மீனம்
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி: 2023/07/13
சீட்டிழுப்பு இலக்கம்: 5174
ஆங்கில எழுத்து: C | வெல்லப்பட்ட இலக்கங்கள்: 8 4 9 1 1 9
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம்: 2148 | வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2023.07.13 | தினம்: வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 29 38 45 49 | ஆங்கில எழுத்து: R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,964,812.40
சுப்பர் போல் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள்: 07 28 30 43 W

### சனிதா

திகதி: 2023.07.13 | வெற்றி வாரம்: 4309 | வர்ணம்: சிவப்பு
வெற்றி இலக்கங்கள்: 01 20 24 43 | J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,899,064.00
சனிதா "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள்: 11 19 27 69 W
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு வாரம்: 3860 | வர்ணம்: கபிலம்
சீட்டிழுப்பு திகதி: 2023.07.13 | தினம்: வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 09 26 50 55 | சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,019,764/-
ராசி அதிர்ஷ்டம் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள்: 14 43 52 54 | ரிஷபம்

### கப்ருக

திகதி: 13.07.2023 | வெற்றி வாரம்: 1324
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்: O 29 38 52 55 66
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 416,356,124.20
கப்ருக "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள்: 05 19 27 47 G
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### அபிவிருத்தி அதிர்ஷ்டம் (සංවර්ධන වාසනාව)

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம்: 610 | திகதி: 2023-07-13 | வர்ணம்: நீலம்
ஆங்கில எழுத்து: G | வெற்றி இலக்கங்கள்: 31 32 37 | விதி எண்: 06
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.21,725,224.00
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 1974
சீட்டிழுப்பு திகதி : 2023.07.13
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,167,398/-
வெற்றி இலக்கங்கள்: 43 52 68 71 | ஆங்கில எழுத்து: B
அத கோடிபதி "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள்: 56 63 66 74 A
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருந்தூரில் இன்று பொங்கல்

# இந்து ஆலயம் நிறுவப்படுவதாக தெரிவித்து சிங்களவரை ஒன்றிணையுமாறு பௌத்த தேரர் அழைப்பு

(முல்லைத்தீவு)

குருந்தூர் மலையில் இன்று பொங்கல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் குறித்த பகுதியில் இந்து ஆலயம் ஒன்று நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்கு எதிராக அனைத்து சிங்களவரையும் அணி திரளுமாறும் பௌத்த தேரர் ஒருவர் அழைப்பு விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் தமிழர்களால் இந்து ஆலயம் ஒன்று நிறுவப்படுவதற்கு வாய்ப்பு உள்ளதாகவும் அங்கு இனமுறுகல் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்து நீதிமன்ற கட்டளைகளை மீறி அங்கு விகாரை கட்டுமான பணிகளை முன்னின்று செயற்படுத்திய வெலிஓயா சப்புமல் தன்ன விகாரை, மற்றும் குருந்தூர் மலையில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட குருந்தி விகாரை ஆகிய வற்றின் விகாராதிபதி கல்கமுவ சாந்த போதி தேரர் கடந்த 11 ஆம் திகதி முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் மூவரின் பெயர்களையும் குறிப்பிட்டு முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் மயூரன் மற்றும் நல்லூர் சிவகுரு ஆதீனத்தின் முதல்வரும், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையாக மக்கள் பேரியக்கத்தின் இணைப்பாளருமான தவத்திரு வேலன் சுவாமிகள் ஆகிய மூவருக்கு எதிராக இம்முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த கல்கமுவ சாந்தபோதி தேரர் முகநூலில் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களைச் சார்ந்த தமிழ்த் தீவிரவாதிகள் மற்றும் இந்துக் குருமார்களையும் இணைத்து மிகப்பெரிய பூஜை ஒன்றை நடத்தி ஆலயம் ஒன்றை நிறுவ இருப்பதாக தகவல் கிடைத்துள்ளதாக தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு எதிராக இன்று சிங்கள மக்கள் அனைவரையும் ஒன்றிணையுமாறு தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் துரைராசா ரவிகரன் பிறிதொரு தேவைக்காக முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் சென்றபோது அவரை அழைத்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இதன்பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவித்த ரவிகரன் எவ்வாறாயினும் இன்று பூஜைகள் நடைபெற்று குருந்தூரில் பொங்கல் நடைபெறும் என்றார். (ம-7)


**பணியாளர் தேவை**

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றுக்கு உணவு பரிமாறும் பணியாளர் தேவை. (சப்பிளே)

(c-6912)

**077 649 1027**



**வேலை வாய்ப்பு**

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனத்தின் பருத்தித்துறை, நெல்லியடி கிளைகளுக்கு மிககுறைந்தளவிலான வேலைவாய்ப்புக்களே உள்ளன. க.பொ.த சாதரண தரத்தில் கணிதம் மற்றும் தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி மற்றும் க.பொ.த உயர் தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

முடிவுத் திகதி - 21/07/2023

(16286)

**077 803 9320**


## யாழ். பொலிஸ் நிலையத்தில்

# வாக்குமூலம் அளிக்க சென்ற பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

இளைஞன் உயிர்மாய்த்த சம்பவம் தொடர்பில் வாக்கு மூலம் அளிக்க சென்ற வயோதிப பெண்ணொருவர் பொலிஸ் நிலையத்தில் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் 4 ஆம் குறுக்குத் தெரு பகுதியில் வீடொன்றில் வாடகைக்கு தங்கியிருந்த மல்லாவி துணுக்காய் பகுதியைச் சேர்ந்த யே. தேவரஞ்சன் (வயது 31) எனும் இளைஞன் நேற்று புதன்கிழமை இரவு விபரீத முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாண பொலிஸார், இளைஞன் தங்கியிருந்த வீட்டின் மற்றுமொரு அறையில் தங்கியிருந்த வயோதிப பெண்மணியை வாக்கு மூலம் வழங்க வருமாறு நேற்று புதன்கிழமை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு அழைத்திருந்தனர்

அதன் அடிப்படையில் வாக்குமூலம் அளிக்க பொலிஸ் நிலையம் சென்றிருந்த பெண்மணி, திடீர் சுகவீனமுற்று பொலிஸ் நிலையத்தில் மயங்கி விழுந்துள்ளார்.

அதனை அடுத்து நோயாளர் காவுவண்டி மூலம் பெண்மணியையாழ் போதனா வைத்தியசாலைக்கு அழைத்து சென்றபோது, பெண்மணி உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், திடீர் மரண விசாரணை அதிகாரி ந. பிறேமகுமார் மரண விசாரணைகளை முன்னெடுத்தார். (ம-7.33.104)

## எடுத்ததற்...

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இராணுவ முகாம்கள் அமைந்துள்ள பகுதிகளில் கண்டுபிடிக்கப்படும் மனித புதைகுழிகள் தொடர்பாக சர்வதேச கண்காணிப்பை கோருவது சிறுபிள்ளை தனமானது எடுத்ததற்கெல்லாம் சர்வதேச விசாரணையை கேட்காதீர்கள் என தமிழ் அரசியல்வாதிகளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன வலியுறுத்தியுள்ளார். அகழ்வு பணிகளை விமர்சிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது எனக் கூறியுள்ளார்.

"வன்னிப் பிரதேசம் யுத்தம் நடந்த பூமி எனவும் அந்தப் பகுதியிலேயே மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சம்பவங்கள் நடக்கும் இடங்களில் அரச புலனாய்வாளர்களின் பிரசன்னம் இருக்கும் என்பதுடன், அதனை தவிர்க்க முடியது எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

அது தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் கண்டனம் தெரிவிப்பதைத் தவிர்க்க வேண்டும் என கூறியுள்ள அவர், மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் நீதிமன்ற உத்தரவில் காவல்துறையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## முல்லை...

த.பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில்.

முன்னதாக நீதிபதி அவர்களால் சட்ட வைத்திய அதிகாரியிடம் கருத்துக்கள் கேட்கப்பட்டது இதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் கனகசபாபதி வாசுதேவா, யாழ்ப்பாணம் வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் செல்லையா பிரணவன், யாழ்ப்பாணம் வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் உருத்திரபசுபதி மயூரதன் ஆகிய மூவர் கொண்ட குழாம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் கனகசபாபதி வாசுதேவா தலைமையில் குறித்த பணியை முன்னெடுக்கும் எனவும் இதில் அகழ்வு பணிகளை முன்னெடுக்க தொல்லியல் திணைக்களத்தினரை உள்வாங்க வேண்டும் எனவும் அவர்களே அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் குறித்த பகுதியில் மழைக்காலத்துக்கு முன்னதாக அகழ்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் குறித்த அகழ்வுப்பணிக்கான நிதி ஏற்பாடுகள் செய்யவேண்டும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து சுமார் இரண்டு மணித்தியாலங்களாக பல்வேறு தரப்புக்களின் கருத்துக்களை தொடர்ந்து எதிர்வரும் வியாழக்கிழமை (20.07.2023) அன்று சர்வதேச நியமங்களுக்கு அமைவான சட்டவைத்திய அதிகாரிகளின் அகழ்வு நடவடிக்கைகள் ,நிதி தொடர்பான விடயம் ஓ. எம். பி அலுவலகம் ஊடாக நிதியை பெற்றுக்கொள்ளல், விரைவாக அகழ்வு பணிகளை மேற்கொள்ளவேண்டும், சான்றுப்பொருட்களை பாதுகாக்கும் பொறிமுறை, குறித்த காணி தொடர்பில் நில அளவை திணைக்களத்தின் வரைபடங்கள், தொல்லியல் திணைக்களத்தின் அகழ்வுப் பணிதொடர்பான விடயங்கள், கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளரால் குறித்த காணி சுதந்திரத்தின் பின்னர் யார் யாரின் ஆளுகையில் இருந்தது என்பது தொடர்பான விடயம் தற்போதுள்ள பாதுகாப்பை அதிகரித்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அன்றைய தினம்(20) அகழ்வு பணி தொடர்பில் தீர்மானிப்பதாக தெரிவிக்கப்பட்டது. (ம-7)


**VILLAGE HOTEL JAFFNA EXPRESS**

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=

(16033)

T.P:077 544 8503



**சேல்ஸ்மான் தேவை**

எமது புடவை நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள ஆண்/ பெண் பணியாளர்கள் தேவை.

மதிய உணவுடன் கூடிய சம்பளம்.

சிவகணேசன் TEX

41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(16289)



**சேவைநலன் பாராட்டு**

வட மாகாண தொழில்நுட்ப (பொறியியல்) உயிர்நாடியானவர்
இன்றுடன் அரச சேவைதனில் பெறுகின்றார் ஓய்வு

**எந்திரி சோ.சண்முகானந்தன்**

பிரதிப் பிரதம செயலாளர் - பொறியியல் சேவைகள்
வடக்கு மாகாணம்

சேவைக்காலம் 1991 - 2023



பொறியியலாளர்களில் சேவைமூப்பில்
முதன்னிலையானவர்
பொறியியலுடன் நிறை நிர்வாகமாற்றியவர்
பெறுகை நடைமுறைகளின்(ல்)
கலங்கரை விளக்கானவர்
வடக்கின் கட்டுமானத்தினை கண்ணியமாய்
நெறிப்படுத்தியவர்
எதனையும் நன்காராய்ந்து போதிப்பதில் /
செயலுரு வழங்குவதில் வல்லவர்
"இதுவும் கடந்து போகும்" என்பதனை
உளமார பின்பற்றி வருபவரின் வழித்தடம்
பற்றியுயர்ந்த எம் பிரதிப் பிரதம செயலாளர் –
பொறியியல் சேவைகள் (வ.மா)
அவர்களை ஏற்றங்கள் பல கண்டு பகுதியாய்
எம்மவர்க்கான போதனை தொடர்ந்து
உவகையுடன் வளமோடு வாழ
பணிவுடன் வாழ்த்துகின்றோம்.

பணிவு கலந்த அன்புடன்
தங்கள் வழித்தடம் பின்பற்றுவோர்

(16288)



**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA

கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

V2 TRAVELS

0777-068-777

(C-6911)



**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்: •கிளிநொச்சி •சுன்னாகம் •சாவகச்சேரி •மானிப்பாய் •நெல்லியடி •பருத்தித்துறை •திருகோணமலை •வல்வெட்டித்துறை •கோப்பாய் •புத்தூர் •பண்டத்தரிப்பு •சங்கானை •கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-6911)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org